உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டார் வரலாறு.

வெளியிட்டோர்:
ச. அரங்கசாமிப்பிள்ளை.
விருத்தாசலம்.

இரண்டாம் பதிப்பு
(திருத்தியது)
1958

விலை ரூ. 0-50

முதல் பதிப்பின் முகவுரை.

ஓர் வேண்டுகோள்.

—○—

திரு மெய்கண்டார் அவர்களின் சரித்திரம் செய்யுளாகவும், உரைநடைகளிலும் அநேகம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளில் எதுவும் அவருடைய காலத்திலேயே எழுதப்பட்டவைகளாக ஏற்படவில்லை பிற்காலத்தவர்களால் தங்கள் தங்களின் ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட வரையில் எழுதப்பட்டிருக்கிறதாக ஏற்படுகிறது. அவைகளிலும் திரு மெய்கண்டார் பிறந்த இடமான பெண்ணாகடத்தாரால் வரலாறு ஒன்றும் எழுதப்பட்டதாக தெரியவில்லை. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய அவருடைய அருளினால் பெண்ணாகடத்தில் பிறந்த அடியேனுக்கு கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு இந்த வரலாற்றை எழுதியிருக்கிறேன். இந்த வரலாற்றின் (முதல் பதிப்பின்) 18-வது பாராவில் கண்டிருக்கும் மெய்கண்டாரின் அம்மான் காங்கயபூபதி என்பவர் அதில்சொல்லியிருக்கும் கோப்பெருஞ்சிங்கன் என்ற அரசனின் குமாரனாக இருக்கலாமாவென்றும் அதில் சொல்லப்பட்டிருக்கும் கல்வெட்டு அகவலிலிருந்து கருதலாம் என்றும் தோன்றுகிறது. இதோடு இதன் முதல் பதிப்பின் 23-வது பாராவில் சொல்லப்பட்ட விஷயங்களுடன் பெண்ணாகடத்தில் அதிகரா பட்டங்களான குருகுலராயர், வாணாதி ராயர், கனக ராயர், பிரதானிகம் தளகர்த்தம், சம்பதரியர் முதலிய பட்டம்உடைய வம்சங்கள் இன்னும் இருக்கின்றன. ஷை விஷயத்தையும்

இந்த வரலாற்றில் கண்டிருக்கும் மற்ற விஷயங்களையும் அறிஞர்களால் இதில் சொல்லப்படும் மூலாதாரங்கள் ஏதேனும் கிடைத்தால் அவைகளையும் பரிசோதித்து இதில் உள்ள குற்றம் குறைகளை எடுத்து தெரிவிக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

விருத்தாசலம்
10—12—54

ச. அரங்கசாமிப் பிள்ளை,
வக்கீல்.

முதல் பதிப்புக்கு மதிப்புரை.

K. Sivaraman M. A.,
Lecturer in Philosophy
Department of Philosophy

Benaras Hindu
University
Dated 6—5—1955

அன்புடையீர்!

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய மெய்கண்டார் வரலாறு கிடைக்கப்பெற்றேன். நூலின் அனுபந்தமாகத் தரப்பட்டுள்ள திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டார் சந்தான மரபு விவரம் எனக்கு மிக உதவியாக இருந்தது. மெய்கண்டார் வம்ச பரம்பரை ஆராய்ச்சியில் தாங்கள் காணும் முடிவுகள் மிகப் பொருத்தமாகக் காணப்படுகின்றன. தமிழ் நாவலர் சரிதையில் போற்றப்படும் அச்சுத களப்பாளரும் மெய்கண்டாரின் தகப்பனுரான அச்சுத களப்பாளரும்,

ஒருவர் என்பது உண்மையானால் தாங்கள் மேற்கொண்டு காணும் முடிவுகள் பொருந்துகின்றன. மெய்கண்டாரே தாங்கள் கூறுவதுபோல் அரசராகவும் இருந்திருக்கலாம். 'மெய்கண்டார்' என்னும் பெயரே காரண இடுகுறியாக சைவ சித்தாந்த முதனூலாசிரியருக்கு வழங்கியிருக்கக்கூடும். நூலின் உதாரண வெண்பாக்களுள் ஆங்காங்கு 'மெய்கண்டான்' என்ற சொற் பிரயோகம் மிக அழகிய முறையில் அமைந்திருக்கிறது.

தாங்கள் இறுதியில் எழுப்பும் சில வினாக்கள் ஆராய்தற்குரியன. ஒழிவிலொடுக்க ஆசிரியர் மெய்கண்டார் மாணவருள் ஒருவர் என்பதும் கர்ண பரம்பரையே தவிர உண்மையெனக் கொள்வதற்குப் போதிய அகச் சான்றுகளோ, புறச்சான்றுகளோ இல்லை. முதனூல் வழிநூல்களைப் பின்பற்றி வெவ்வேறு சந்தானங்கள் கிளைத்த உண்மையைக் கொண்டு அவற்றிற்குப் பேதம் காண வேண்டுமென்பதில்லை; கொள்வோர் கருத்து வேறுபாடு பற்றியாதல், வேறு காரணங்களாலாதல் சந்தான உட்பிரிவுகள் ஏற்படலாமல்லவா?

சிவஞானபோத நெறியை அத்துவைத வேதாந்திகள் ஒப்புவது ஆராய்தற்குரியது. நூலின் வார்த்திகத்தையும், அதிகரணப் பகுப்புகளையும் ஒதுக்கித் தங்கள் மனம்போன வண்ணம் 12-சூத்திரங்களுக்கும் உரை செய்து வெளியிட்டுள்ளார்கள் ஓரிரு 'அத்துவைதிகள்' அதனால் மெய்கண்டார் நூதலும் சித்தாந்தம் கலப்புடையதா என்று ஐயுறத் தேவையில்லை.

தாங்கள் அரிதில் முயன்று எழுதியுள்ள இச்சிறு வரலாற்று நூலை சைவ உலகம் நன்கு வரவேற்கும் என்பதில் ஐயமில்லை, 4-ம் பக்கத்தில் திருநாவுக்கரசு

நாயனார் புத்தசமயத்துக்குட்பட்டதாக எழுதியிருப்பது ஜைன சமயம் என்று திருத்தப்பட வேண்டும்.

வணக்கம்.

அன்பன்,

சிவராமன்.

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

---

1. மெய்கண்டார் வரலாற்றின் முதல் பதிப்பைக் கண்ணுற்றவர்களில் சில பெரியார்கள் அதிலுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டியதற்கு அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை தெரிவிக்கிறேன்.

2. இந்த பதிப்பில் அதில் கண்டிருக்கும் விஷயங்களைப்பற்றி அடியேனுக்கு கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு சில திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

3. இந்தப் பதிப்பிலும் தவறுதல் ஏற்பட்டு அந்தத் தவறுதல் பிறபட்டு இந்த நூல் அச்சிட்டு முடிவதற்குள் தெரிந்தவைகளை இந்த நூலிலேயே பிற்பகுதியிலும், அவைகள் தவிர நூதன விஷயங்கள் தெரிந்தவைகளை இந்த முகவுரையிலும் சொல்லப்படுகிறது.

4. "பெண்ணாகடத்தின் பெருமையை 3-முதல் 7-பக்கங்களில் சொல்லப்பட்டிருப்பதில் பெண்ணாகடத்தில் அந்தணர்கள் அதிகமாக இருந்தார்கள் என்று திரு

ஞான சம்பந்தர் தேவாரத்தில் கண்ட ஆதாரத்துடன் இன்னும் சில காரணங்களுடன் எண்பிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் தவிர பின்னிட்டு வந்த சேக்கிழார் அவர்களும் பெரியபுராணம் என்கிற திருத்தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசர் வரலாற்றில் பெண்ணுகடத்தின் பெருமையைச் சொல்கிறபோது,

கார்வளரும் மாடங்கள் கலந்தமறை ஒலிவளர்க்குஞ்
சீருடை அந்தணர்வாழுஞ் செழும்பதியின் அகத்தெய்தி
வார்சடையார் மன்னுதிருத் தூங்கானை மாடத்தைப்
பார்பரவுந் திருமுனிவர் பணிந்தேத்திப் பரவினர்.

என்றும்,

திருஞான சம்பந்தர் வரலாற்றிலும்

" பெண்ணுகடம் அணைந்திடு மறையோசை ஓங்கு தூங்கானை மாடத்துள் அமர்கின்ற ஒரு தனிப் பரஞ்சோதி " என்றும் அந்தணர்கள் வாழும் ஊர் என்று கூறுகிறார்.

5. இதன் 19-ம் பக்கத்தில் 14-வதுபாராவில் இதில் இரண்டாவது அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் செப்புப்பட்டயம் கொடுத்த தேதியை "சாலிவாஹன சகாப்தம் பதின்மூன்றும் வருஷம் செல்லாநின்ற ஜெய வருஷம் வைகாசி மாதம் 23ம்தேதி" என்று கண்டிருக்கிறது, அதாவது கி. பி. 90-வது வருஷமாகிறது. அந்த கணக்கின்படி இப்போதைக்கு சுமார் 1870-வருஷங்களுக்கு முன் ஆகிறது. அது அவ்வளவு காலம் முற்பட்டதல்லவென்றும், பிற்காலத்ததாகவே இதன் 19, 20-பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்பட்ட காரணங்களோடு மற்றொரு காரணமும் இப்பால் விளங்குகிறது. அதாவது ஷெ. செப்புப்பட்டயத்தில் பெண்ணுகடத்திற்கு சுமார் ஒரு

மைல் தூரத்தில் உள்ள "யெரையூர்" என்கிற ஊரைக் குறிப்பிடுகிறது. ஷை ஊருக்கு ஆதியில் "மாறன் பாடி" என்று பெயர். சேக்கிழார் பெருமானால் திருஞான சம்பந்தர் வரலாற்றில் அவர் பெண்ணாகடத்தில் தூங்கானை மாடத்து சுடர்க்கொழுந்தீஸ்வரரை வணங்கிய பிறகு திருவரத்துறைக்குப் போகும் வழியில் "மாறன்பாடி" என்ற பதியில் தங்கினார் என்று திருத்தொண்டர் புராணத்தில் சொல்லப்படுகிறது. அதனால் சுமார் 1300-வருஷங்களுக்கு முன் இருந்த திருஞான சம்பந்தர் காலத்திலும், பிற்பட்ட சேக்கிழார் பெருமான் காலத்திலும் "யெரையூர்" என்கிற ஊரானது "மாறன்பாடி" என்ற பெயருடன் இருந்திருப்பதாக ஏற்படுகிறது. ஷை சேக்கிழார் பெருமான் காலம் சோழ அரசன் அநபாயர் என்கிற குலத்துங்க சோழன் II காலம் என்று வழங்கப்படுகிறது. இந்த இரண்டாவது குலோத்துங்க சோழன் காலம் 1133-முதல் 1150-A. D. என்று சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அதனால் சேக்கிழார் காலம் 12-ம் நூற்றாண்டு என்று ஏற்படுகிறது. அதனால்பன்னிரெண்டாம் நூற்றாண்டுவரையில் அவ்வூர் "மாறன்பாடி" என்ற பெயருடன் இருந்து பிற்பட்டு மாறி "யெரையூர்" என்று வந்திருக்கவேண்டும். அப்படியானால் ஷை செப்புப்பட்டயமும் 12-ம் நூற்றாண்டு முற்பகுதிக்குப் பிறகே ஏற்பட்டிருக்கவேண்டும். இதனாலும் இந்த வரலாற்றில் 14-வது பாராவில்கண்ட செப்புப்பட்டய காலம் இப்போதைக்கு சுமார் 850-வருஷங்களுக்கு முன் இருக்கலாம் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது.

6. இதன் 23-ம் பக்கத்தில் "தென் தில்லைஅச்சுதன்" என்பதில் "தென் தில்லை என்றதனால் வட தில்லை என்று ஓர் ஊர் இருக்கிறதா வென்கிற சந்தேகம் ஏற்படலாம், வட தில்லை என்று ஓர் ஊர் இருந்த

தாகவாவது, இருப்பதாகவாவது தெரியவில்லை" என்று 21-வது பாராவில் எழுதப்பட்டிருக்கிறது. அது அடியேனுடைய அறியாமையே. இப்பால் * சிவதலமான்மியச் சுருக்கம் என்கிற பழைய நூலில் தொண்டை நாட்டின் 58-வது தலமாக அரணீ என்கிற நதிக்கரையில் "வடதில்லை" என்று ஓர் ஊர் இருப்பதாகவும், அதில் சோழ மகாராஜன் மரகத வல்லித்தாயார் சமேத பாபஹரேஸ்வரரை வணங்கியதில் அவருக்கு பிரமஹத்தி தோஷத்தை போக்கி நடன தரிசனமும் அளிக்கப்பட்ட தலம் என்றும் ஏற்படுகிறது. அதனாலும் தென்தில்லை என்பது சிதம்பரத்தையே குறிக்கும்.

7. முதல் பதிப்பில் மெய்கண்டார் கண்ட சைவ சித்தாந்த சமயம் என்கிற தலைப்பில் சிவஞானபோத நூலின் அம்சங்களைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. இந்தப் பதிப்பில் அதைப்பற்றிச் சொல்லத் துணிந்தது அடியேனுடையமடமைத்தனம். ஆயினும் அப்படித்துணிந்து சொன்னால்தான் அறிஞர்கள் இதில் உள்ள குற்றம் குறைகளை சொல்ல முன்வருவார்கள் என்று எண்ணி அடியேனுக்கு புலப்பட்ட வரையில் எழுதினேன். அதிலும் பஞ்சாக்ஷர ஜெபம் எப்படி செய்ய வேண்டும் என்று (திருமுகமாகக் கேட்டுக் கொள்ளவேண்டியதாக இருந்த போதிலும், மெய்கண்டார் கருதுகிறார் என்பதை மிகவும் அச்சத்தினலேயே சொல்லப்படவேண்டிய இடத்தில் சொல்லப்படாமல் இந்த முகவுரையிலேயே சொல்லத்துணிந்தேன்.

---

* ஷை சிவஸ்தலமான்மியம் வெகுகாலத்துக்கு முன் அச்சிட்டது. கிழிந்துவிட்டது. அச்சிட்ட வருஷம் அச்சிட்டவர் பெயர் தெரியவில்லை.

இதன் 55-ம்பக்கத்தில் ஐந்தெழுத்து என்பது "நமசிவாய, சிவாயநம, சிவயசிவ, சிவ, சி" என்று சொல்லப்படுவதாக கண்டிருக்கிறது. இவைகளில் எதை ஜபிக்கவேண்டும் என்று மெய்கண்டாரால் சொல்லப்படவில்லை. அவர் "விதி எண்ணும் அஞ்செழுத்தே" என்றுதான் சொல்கிறார். அவருடைய பிரதம மாணவரான அருணந்தி சிவாச்சாரியார் அவர்களும், "அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க" என்று சொல்லிவிட்டார். ஆனால் மெய்கண்டாரின் மற்றொரு மாணவரான மனவாசகங் கடந்தார் உண்மை விளக்கம் என்கிற நூலில் தன்னுடைய வினாக்களுக்கு மெய்கண்டார் விடை அளித்ததாக சொல்கிறார். அதில்

"ந"ம்முதல் ஓதில் அருள் நாடாது, நாடும் அருள்
"சி"ம்முதலா ஓது நீ சென்று

என்றும் அதன் பின்னிட்ட வெண்பாக்களிலும் வலியுருத்தியிருக்கிறார் அதனால் மெய்கண்டார் பஞ்சாக்ஷரத்தை "விதி எண்ணும் அஞ்செழுத்தே" என்பதில் "சிவாயநம" என்று ஓதும்படி உபதேசிப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது.

8. இந்த நூலைக் கண்ணுறும் அறிஞர்கள் இதில் கண்டிருக்கும் ஆதாரங்களையும் இவைகள் தவிர தங்களுக்கு கிடைக்கும் வேறு ஆதாரங்களையும் பரிசோதித்து இதில் இருக்கும் குற்றங்களை மன்னித்து அடியேனுக்கும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

இப்படிக்கு.

விருத்தாசலம்
3—12—1958

ச. அரங்கசாமிப் பிள்ளை,
வக்கீல்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டார் வரலாறு.

விநாயகர் துதி.

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

— சிவஞான போதம்

மெய்கண்டார் துதி.

மலர்தலை யுலகின் மாயிருள் துமியப்
பலர்புகழ் ஞாயிறு படரின் அல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போல் ஈண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருள்தீர்ந்
தருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே.

— சிவஞான போதம்
சிறப்புப்பாயிரம்.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ்வெண்ணெய்மேவு
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

— சிவஞான சித்தியார்

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் — [வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால்வே [றின்மை
கைகண்டார் உள்ளத்துக் கண்.

— இருபாவிருபது

ஓங்குபுகழ்த் திருக்கடந்தை நகரில் வேளாண்
உயர்குலஞ்செய் பெருந்தவ மோருரு வுற்றாங்கு
வாங்குதிரைக் கடலுலகில் வந்து தோன்றி
மாதேவன் திருவடியை மறவா நெஞ்சிற்
பாங்குறுநற் பரஞ்சோதி முனிவர் கூறும்
பதிபசு பாசத்திறனிப் பாரோர் தேர்ந்து
தீங்ககலச் சிவஞான போதஞ் சாற்றுஞ்
செய்ய மெய்கண்டார்தாள் சிரத்தில் வைப்பாம்.

— கடந்தைப் புராணம்

மறைஞான சம்பந்த சிவாசாரியார் துதி.

வாய்ந்தபுகழ் மெய்கண்ட தேவருக்கு
மாணுக்கருணந்தி தேவர் தம்பால்
ஆய்ந்தபலகலை யோதித்தமை யடைந்த
வருள்பெருகு கொற்றவன் குடியில் வாழும்
காய்ந்த பவத்துமாபதி தேவருக்கு ஞானங்
கவினவுரைத்தருள் செய்யுங் கடந்தை வந்த
ஏய்ந்த தவத்துயர்ந்த மறைஞான தேவர்
இணைமலர்த் தாளெஞ்ஞான்று மிறைஞ்சுவாமே.

— கடந்தைப் புராணம்

பெண்ணுகடத்தின் பெருமை.

ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்பொருட்டு சிவபெருமான் கருணை கூர்ந்து தமிழ் நாட்டில் சுயம்பு லிங்கமாக எழுந்தருளியிருக்கும் பல தலங்களில் பெண்ணுகடம் மிகச்சிறந்தது. இத்தலம் ஆதிகாலத்தில் புஷ்பம் நிறைந்த சோலைகளுடன் காடாக இருந்ததிஞல் இத்தலத்துக்கு "புஷ்பவனம்" என்றும், திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதிலிருந்து வெளி வந்த கொடிய விஷத்தை உண்ட சிவபிரானது வெப்பத்தைத் தணித்து அந்த வெப்பத்திஞல் உண்டான அவருடைய சோகத்தை இந்த புஷ்பவன வாசத்திஞல் தீர்க்கப்பெற்றதிஞல் "சோகநாசனம்" என்றும், சிவபிரான் இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் வசித்ததிஞல் "சிவவாசம்" என்றும் இந்த தலத்துக்குப் பெயர்கள் உண்டு. தேவேந்திரனுடைய பூஜைக்காக இந்த

புஷ்பவனத்தில் தேவகன்னிகைகள் மலர் எடுக்க வந்த போது இவ்விடத்தில் சிவலிங்கத்தைக் கண்டு பூஜித்துக்கொண்டு திரும்பவும் தேவலோகத்துக்குப் போகாமல் தங்கிவிட்டார்கள். ஷை தேவகன்னிகைகள் திரும்ப வராததினுல் தன் காமதேனுவான காரம் பசுவை அனுப்பியதில் ஷை காமதேனுவும் ஷை சிவலிங்கத்தைக்கண்டு அச்சிவபெருமானுக்கு அபிஷேகமாகப் பாலைச் சொரிந்துகொண்டே வழிபாடு செய்துகொண்டு இருந்துவிட்டது ஷை காமதேனுவும் தேவலோகத்துக்குத் திரும்பி வராததால் தேவேந்திரன் ஐராவதம் என்கிற பட்டத்து யானையை அனுப்ப அதுவும் இங்கே புஷ்பவனத்திற்கு வந்து ஷை சிவலிங்கத்திற்கு விமானமாக நின்று வழிபட்டுக்கொண்டே இருந்துவிட்டது. பூலோகத்துக்குப் போன தேவ கன்னிகைப் பெண்கள், காமதேனு என்கிற பசு, ஐராவதம் என்கிற யானை இவர்கள் யாவரும் திரும்ப தேவலோகத்திற்கு வராததினுல் தானே ஷை புஷ்பவனத்திற்கு வந்து பார்க்க இவர்கள் யாவரும் ஷை சிவலிங்கத்தை வழிபட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்து தானும் ஷை சிவபெருமானுக்கு பூஜை செய்தார். இவ்விதம் தேவேந்திரனுல் பூஜிக்கப் பெற்றதனுல் இத்தலத்துக்கு " மகேந்திரபுரம் " என்ற மற்ருெரு பெயரும் உண்டு. ஷை தேவகன்னிகைகள், காராம்பசு, யானை. இவர்களால் பூஜிக்கப் பெற்றதனுல் (பெண் + ஆ + கடம்) = " பெண்ணுகடம் " என்று இப்போதும் வழங்குகிற பெயரும் உண்டு. சிவபெருமானுக்கு விமானமாக ஷை யானை நின்றதனுல் இந்த தலத்தில் உள்ள கோயிலுக்கு " தூங்கானைமாடம் " என்று பெயர், அந்த பெயருக்குத் தக்கப்படி

விமானமும் அமையப்பெற்றிருக்கிறது. இத்தலத்தில் யானை வழிபட்டதினுல் "கடந்தை" என்கிற பெயரும் உண்டு.

2. "தில்லை மூவாயிரம் **கடந்தை** ஆருயிரம்" என்பது பழமொழி. சிதம்பரம் 3000 தீக்ஷதர்களைக் கொண்ட இடம். பெண்ணுகடம் என்கிற **கடந்தையோ** 6000 அந்தணர்களைக் கொண்டது அந்தக் **கடந்தை** முற்காலங்களில் பெரிய நகரமாக இருந்தது அக்காலங்களில் அதன் வடஎல்லை இப்போதிய "நந்திமங்கலம் என்கிற ஊர். கீழ்புரம் எல்லை 'கிளிமங்கலம்' தென்புரம் எல்லை 'சேந்தமங்கலம்''. மேல்புரம் எல்லை "போத்திரமங்கலம்" என்கிற ஊர்கள். இந்த எல்லைக்குள் இருக்கிற இடம் கீழ்மேல் சுமார் 6 மைலும் தென்வடல் சுமார் 6 மைலும் அதாவது சுமார் 36 சதுரமைல் பரப்பு உள்ளது இதற்குள் இப்போது பல கிராமங்கள் அடங்கியிருக்கின்றன. அக்காலத்தில் **கடந்தை** மாநகரில் ஒவ்வொரு வகுப்பினர் இருந்த ஒவ்வொரு பாகமும் இப்போது ஒவ்வொரு தனி ஊராக இருக்கிறது. உதாரணமாக இப்போது **குசப்பளம்** என்று வழங்குகிற ஊரானது அந்தக் காலத்தில் குயவர்கள் என்கிற ஜாதியார்கள் வசித்த **குசப்பாளயம்** என்று இருந்த பாகம். அதுபோலவே **கடந்தை** நகரில் அந்தணர்கள் 6000 இருந்த பாகத்திற்கு **அழகா ஏரி** என்று முற்காலத்தில் பெயர் வழங்கப்பட்டது. மெய்கண்டாரின் முன்னேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் செப்புப்பட்டயத்தில் **அழகா ஏரி** என்கிற பெயர் காணப்படுகிறது. அந்த செப்புப்

பட்டயத்தின் நகல் இதில் முதல் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. **அழகா ஏரி** என்கிற பெயர் இப்போது **அரியராவி** என்கிற பெயரால் வழங்கப் படுகிறது. அது முற்காலங்களில் 6000 அந்தணர்கள் வசித்த இடம். அதற்கு அத்தாக்ஷியாக ''ஆராயிர அம்மன்'' என்று ஒரு அம்மன் கோயில் இப்போதும் இருக்கிறது. அந்தஊர் இப்போதிய பெண்ணாகடத்தின் வடகீழ்பாலில் பெண்ணாகடத்தைச் சேர்ந்தாற்போல் உள்ள இடம் அந்த அரியராவி என்கிற அந்தணர் களின் ஊருக்குத் தெற்கில் அதைச் சேர்ந்தாற்போல் இப்போதிய பெண்ணாகடத்தின் எல்லைக்குள் **பாப்பான்குளம்** என்கிற பெயருடன் ஒரு குளமும் இப்போதும் இருக்கிறது. அக்காலங்களில் அந்தணர்கள் அதிகமாக **கடந்தையில்** வசித்து வந்தார்கள் என்பதற்கு சைவக்குரவர்களில் அந்தணர் வகுப்பினரான சுமார் 1300 வருஷங்களுக்கு முன் அவதாரம் செய்த திருஞானசம்மந்தர் தேவாரத்தில் திருப்பெண்ணாகடப் பதிகத்தில் முதல் பாசுரமான அடியிற்கண்ட பாசுரமும் ஆதாரமாக இருக்கிறது.

ஒடுங்கும் பிணிபிறவி கேடு என்றுஇவை
    உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் இடம்கருதி நின்றீர் எல்லாம்
    அடிகளடி நிழல்கீழ் ஆளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவி எங்கும்
    கெழுமனைகள் தோறும் மறையின்ஒலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
    தூங்கானை மாடம் தொழுமின்களே!

[அதாவது பெண்ணுகடம் என்கிற கடந்தையில் எங்கும் சிறந்த அந்தணர்களுடைய ஒவ்வொரு வீட்டிலும் வேதம் ஓதும் ஒலி நிறைந்திருந்தது.]

அதனுல் கடந்தை ஆருயிரம் என்பது ஆருயிரம் அந்தணர்களையே குறிக்கிறது.

3 பிற தலங்களில் மெய்ம்மையோடும், அன்போடும் வழிபட்டாலொழிய பயன் கிடைக்காது பெண்ணுகடத்திலோ பொய்யாகவாவது அன்பின்றியாவது அல்லது அண்மையில் போகாது தூரத்தே நின்று அத்தலத்தின் திசைநோக்கியாவது வழிபடினும் முத்தி கிடைக்கும். முன் ஒரு யுகப் பிரளயத்தில் தேவர்கள் தாங்கள் இறக்காமல் இருப்பதற்கு உபாயம் என்னவென்று கேட்டதற்கு பிரமன் உரைத்தபடி அவர்கள் இப்பெண்ணுகடத்தை அடைந்து பரம சிவனை பூஜித்து வந்தார்கள் அப்படி பூஜை செய்து வரும் காலத்தில் ஷை பிரளய ஜலம் உலகத்தை அழித்தும் இப்பெண்ணுகடத்துக்குள் வராமல் சூழ நிற்க, அத்தேவர்கள் இத்தண்ணீரை சுவறச்செய்தருள வேண்டுமென்று திருத்தூங்கானை மாடத்தில் எழுந்தருளியிருக்கும் சுடர்க்கொழுந்தீஸ்வரரைப் பிரார்த்திக்க அவரும் தமது இடபதேவரை நோக்கி, இத்தண்ணீரை 'நீ சுவறச் செய்க' என்று ஏவ அவர் தாம் முன்னிருந்த மேற்றிசை முகம் மாறி கீழ்த்திசை முகமாகி அப்பிரளய வெள்ளத்தை உரிஞ்சி சுவறச் செய்தார் அது பற்றி பரமசிவன் பிரளயகாலேஸ்வரர் எனப் பெயர் பெற்றனர். மேற்கண்ட வரலாறு பதினெண் புராணங்களில் ஒன்ருகிய ஸ்காந்த புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று இப்பெண்ணுகட புராணம் கூறுகிறது

4. பெண்ணுகடமானது வெள்ளாறு என்றும், நீவாநதி என்றும், சுவேதநதி என்றும் வழங்குகிற நதியின் வடகரையில் உள்ளது. வெள்ளாற்றின் கரையில் சப்த ரிஷிகளும் தனித்தனியே பூஜித்த "சப்த துரை" என்கிற ஏழு துறைகளில் ஆங்கிரச ரிஷி தபசு செய்ததும், பூஜித்ததுமான ஆஜர் கிழக்கிலுள்ள திருக்கைத்துறையும் இத்தலத்தில் சேர்ந்தது. ஸ்ரீ கபில முனிவர் ஞானோபதேசம் பெற்றதும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான ஸ்ரீ கலிக்கம்ப நாயனார் திருஅவதாரஞ் செய்யப்பெற்றதும், அந்நாயனாரால் வெட்டப்பட்ட அவருடைய மனைவியார் கை வளரப்பெற்றதும், அவ்விருவரும் முத்தியடையப் பெற்றதும், ஸ்ரீ திருநாவுக்கரசு நாயனார் ஜைனசமயத்துக்குட்பட்டதனால் நேர்ந்த குற்றம் தீர சூலக்குறி, இடபக்குறி இரண்டும் பொறிக்கப்பெற்றதும், ஸ்ரீ சமயாசாரியார்கள் நால்வருள் இருவர்களான ஸ்ரீ ஞான சம்பந்தபெருமான், வாகீசப்பெருமான் இவர்களால் தேவாரம் பாடப்பெற்றதும், ஸ்ரீ சந்தான குரவர் நால்வரில் முதல்வரான ஸ்ரீ மெய்கண்டார் அவதரித்ததும், மூன்றுமவரான ஸ்ரீ மறைஞானசம்பந்த சிவாச்சாரியார் வாசஞ் செய்ததும் இத்திருத்தலமேயாகும்.

மெய்கண்டார் அவதாரம்

5. இவ்வளவு பெருமை பொருந்திய பெண்ணுகடம் என்ற இத்திருத்தலத்தில் கார்காத்த சைவ வேளாளர் மரபில் அச்சுதகளப்பாளர் என்கிற ஓர் சிற்றரசர் இருந்தார். இவருக்கு வெகுகாலம் பிள்ளைப்

பேறு இல்லாமல் இருந்ததினால் தம் குலகுருவாகிய திருத்துறையூரில் வசித்த *சகலாகம பண்டிதரிடம் தம் குறையைத் தீர்த்துக்கொள்ள வழி வேண்டினர். அக்குலகுருவும் தேவாரத் திருமுறையைப் பூஜித்துக் கயிறு சாத்திப் பார்த்ததில் திருஞானசம்பந்த நாயனார் தேவாரத்தில் இரண்டாம் திருமுறை 184-வது பதிகத்தில் 2-வது பாடலாகிய

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்கிற பாசுரம் கிடைத்தது. சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி இப்பாசுரம் கிடைத்தமையைப்பற்றி குலகுருவானவர் மிகவும் மகிழ்ந்து தமது சீடராகிய அச்சுத களப்பாளரை மனைவியாருடன் திருவெண்காடு சென்று அங்கே சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் என்ற முக்குளத்தில் மூழ்கி, திருவெண்காட்டுநாதரை வழிபடும்படிப் பணித்தார். அச்சுதகளப்பாளரும் மனம் தேறி தம் குலகுருவின் ஆணையின்படி தம் மனைவியாருடன் திருவெண்காட்டில் முக்குளத்தில் ஒவ்வொருநாளும் மூழ்கி, வெண்காட்டுநாதரை வழிபாடு செய்துகொண்டுவந்தார். ஒருநாள் சிவபெருமான் அச்சுதகளப்பாளருக்குக் கனவில் தோன்றி "திருஞானசம்பந்தரை நம்பி அவர் வாக்கின்படி நீ நடந்து கொண்டதனால் ஞானசம்பந்தனைப்போல் உனக்கு ஒரு புத்திரனை அளிப்போம்" என்று அனுக்

* இவருடைய இயற்பெயர் தெரியவில்லை.

கிரகம் செய்தனர். அச்சுதகளப்பாளர் முன்போலவே பின்னும் சிலநாள் முக்குளத்தில் மூழ்கி, சுவேதாரண்ய ஈஸ்வரரை வழிபட்டுவந்து பிறகு பெண்ணைகடத்துக்கு மனைவியாருடன் திரும்பினர். பெண்ணைகடத்திலே அச்சுதகளப்பாளருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தை சுவேதாரண்யர் அருளால் கிடைக்கப்பெற்ற தினல் அக்குழந்தைக்கு "சுவேதவனப் பெருமாள்" என்று பெயரிட்டார்கள் பெற்றோர்கள். அக்குழந்தை ***சாமுசித்தராக** விளங்கிற்று. அக்குழந்தையை செல்வமாய் வளர்க்கும் நாளில் அவருடைய பெற்றோர்கள் ‡சிவலோகப்பதவி அடைந்துவிட்டதனல் அக்குழந்தையின் அம்மான் காங்கயபூபதி தம் ஊராகிய திருவெண்ணெய்நல்லூருக்கு எடுத்துக்கொண்டுபோய் அங்கே வளர்த்துவந்தார்.

6. ஆனல் மெய்கண்டதேவரின் இத்திரு அவதாரத்தை திரு J. M நல்லசாமிப் பிள்ளை அவர்கள் திருவெண்காட்டில் குளத்தங்கரையில் ஒரு குழந்தை இருந்ததாகவும் அதை அச்சுதகளப்பாளரும், அவர் மனைவியாரும் எடுத்து வளர்த்து வந்தனர் என்றும், அக்காலத்தில் அச்சுதகளப்பாளரின் உறவினர்கள் வேறுஜாதி குழந்தையை அவர் வளர்த்து வருவதாக

---

* சாமுசித்தர் என்பவர் முன் பிறவிகளில் சரியை, கிரியை, யோகங்களைச் செய்து, தவ விசேடத்தால் பூர்வஞானத்தோடே பிறந்து, மோட்சம் ஒன்றையே அபேட்சித்திருப்பவர்கள். இவர்களுக்கு சிவபெருமான் தாமே நேரில் அநுக்கிரகம் செய்வார். ஆதலால் இவர்களுக்கு ஞான நூல் வேண்டுவதின்ரும்.

‡ சிவலோகப்பதவி அடைந்த விவரம் பின்னிட்டு சொல்லப்படுகிறது.

அவரை இழிவாகப் பேசினதாகவும் அவர் ஷ குழந்தையை அக்காரணத்துக்காக திருவெண்ணெய்நல்லூர் காங்கயபூபதிகளிடம் விட்டு வளர்த்ததாகவும் சொல்லுகிறார் ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரோ அச்சுதகளப்பாளரையே திருவெண்ணெய்நல்லூரார் என்கிறார். இவைகளுக்குப் போதுமான சான்று இருப்பதாகத் தெரியவில்லை.

மெய்கண்டார் சிவஞானபோதத்தைக் காண்டல்.

7 திருநந்திதேவர் சிவனடியார்களில் தலைமை பூண்டவர் சநத்குமார முனிவர் திருநந்தி தேவரின் மாணவர் சநத்குமார முனிவருடைய மாணவர் சத்திய ஞான தரிசினிகள் இவருடைய மாணவர் பரஞ்சோதி முனிகள் இந்த பரஞ்சோதி முனிகள் திருக்கைலாய மலையிலிருந்து பொதியமலைக்கு அகத்தியமாமுனிவரைத் தரிசிக்க ஆகாய மார்க்கமாய்ச் சென்றுகொண்டிருந்தார் அவர் செல்லுகிற விமானத்தின் நிழல் திருவெண்ணெய்நல்லூரில் விளையாடிக்கொண்டிருக்கிற இரண்டு வயதுள்ள ஷ சுவேதவனப்பெருமாள் என்கிற குழந்தையின்மேல் பட்டு ஷ விமானம் மேலே செல்லாமல்நின்றுவிட்டது பரஞ்சோதி முனிகள் விமானம் நின்ற காரணத்தை ஞானதிருஷ்டியினுல் அறிந்து, குழந்தையின் பக்குவத்தைத் தெரிந்து கீழிறங்கி முன் ஜென்மத்தில் சரியை, கிரியை, யோகம் இம்மூன்றையும் முடித்து இப்பிறப்பில் சாமுசித்தராய் விளங்கின அப்பிள்ளைக்கு, தாம் தம்முடைய குருபரம்பரையில் பெற்றசிவஞானபோதத்தை ஞானோபதேசம் செய்துத்

தம் குருவின் பெயராகிய சத்தியஞான தரிசனிகள் என்பதைத் தமிழில் "மெய்கண்டார்" என்று தீக்ஷா நாமமிட்டுச் சென்ருர். மெய்கண்டாரும் ஷை உபதேச மொழியைக்கேட்டு, அங்கே திருவருட்டுறையில் வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையாரது திரு முன்பு தர்க்கித்துச் சிந்தித்துத் தெளிந்து, தமிழ்நாடு உய்யும் பொருட்டும் அதன் மூலமாய் உலகமே உய்யும் பொருட்டும் சிவஞான போத சூத்திரமும், வார்த்திகப் பொழிப்பும் உதாரண செய்யுட்களுடன் அருளிச் செய்தார்.

அருணந்தி சிவாச்சாரியார் தீக்ஷை பெறுதல்.

8 திருவெண்ணெய்நல்லூரில் மெய்கண்டார் சிவஞானபோதப் பொருளைத் தம்மாணவர்களுக்கு போதித்துக்கொண்டு வருகையில், இவரது குல் குருவாகிய சகலாகம பண்டிதர் தம்மை தமது சீடரான மெய்கண்டார் தேடிவராததற்குக் காரணம் தெரியவில்லையென்று தாமே திருவெண்ணெய்நல்லூருக்குப் புறப்பட்டு வந்தனர் அப்படி வந்தும் மெய்கண்டதேவர் தன் குலகுருவாகிய சகலாகம பண்டிதரைப்போய் பார்க்கவில்லை. அதனுல் சகலாகம பண்டிதர் மெய்கண்டாரிடம் தம் மாணவர்களில் ஒருவரை அனுப்பினுர் மெய்கண்டார் அப்போது சிவஞானபோதத்தைப் பாடஞ் சொல்லிக்கொண்டிருந்தார். ஷை மாணவரும் அங்கேயே பாடம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டாரேயொழிய திரும்பிப் போகவில்லை. பிறகு மற்ற மாணவர்களை ஒவ்வொரு

வராய் சகலாகம பண்டிதர் அனுப்பியதில் அவர்கள் ஒவ்வொருவரும் மெய்கண்டாரிடம் வந்து பாடம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டார்கள் போன மாண வர்கள் திரும்பி வராததினால் அக்குலகுருவாகிய ஷை சகலாகம பண்டிதர், பாடஞ் சொல்லிக்கொண்டிருக் கிற நமது மெய்கண்டதேவர் முன்வந்து உலாவிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் மெய்கண்டதேவர் தம் மாணவர்களுக்கு ஆணவமலத்தைப்பற்றிப் பாடம் போதித்துக்கொண்டிருந்தார். அப்போது சகலாகம பண்டிதர் அவர் முன்பு வந்து ஆணவமலத்தின் சொரூ பம் என்னவென்று கேட்க, அவர் அதற்குப் பதிலாக ஷை குரவரையே சுட்டிக் காட்டினார் உடனே சகலாகம பண்டிதர் அதன் உண்மையை ஷை மௌன தீக்ஷையினால் அறிந்து மெய்கண்டாரைப் பணிந்து அவருடைய நாற்பத்து ஒன்பது மாணவருள் முதல் மாணவராயினர். அவரும் இம்முதல் மாணவருக்கு "அருணந்தி" என்று பெயரிட்டனர். இவர் ஷை சிவஞானபோதத்திற்கு வழிநூலாக சிவஞான சித்தி யார் சுபக்கம், பரபக்கம் என்ற நூலை விரிவாகச்செய்த துடன் "இருபாவிருபது" என்ற மற்றொரு சாத்திரத் தையும் செய்திருக்கிறார் மருதூரில் பிறந்து பெண்ணா கடத்தில் வெகுகாலம் வசித்ததாகச் சிலரும், பெண்ணா கடத்திலேயே பிறந்ததாக மற்றும் சிலரும் சொல்லும் மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் ஷை சகலாகம பண்டிதர் என்கிற அருணந்தி சிவாச்சாரியாருக்கு மாணவரானார் பிறகு சிதம்பரம் மூவாயிரம் தீக்ஷிதர் களில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் ஷை மறை ஞானசம்பந்த சிவாச்சாரியாருக்கு மாணவரானார். ஷை உமாபதி சிவாச்சாரியயாரும் சித்தாந்த சாஸ்திரம்

பதினன்கில் சிவப்பிரகாசம் முதலிய எட்டுச் சாத்திரங்களும், மற்ற நூல்களும் செய்திருக்கிறார்.

சைவ சமய வளர்ச்சி.

9. சைவசித்தாந்த சமயக்கொள்கையைத் தமிழ் நாடு பூராவும் ஆதரிக்கவேண்டியதற்காக மெய்கண்டார் சந்தானத்தின்கீழ் தமிழ்நாடு பூராவிலும் (ஈழநாடு உள்பட) அநேக மடங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளில் இத்துடன் கொடுத்திருக்கும் முதல் அநுபந்தத்தில் கண்டபடி மெய்கண்டாரின் குருசிஷ்ய பரம்பரையில் ஏழாவதாக திருவாவடுதுறை நமச்சிவாய மூர்த்திகள் ஆதீனமும், எட்டாவதாக தொண்டமண்டலத்தில் காஞ்சிபுரம் கச்சிஞானப் பிரகாசர் ஆதீனமும், பனிரெண்டாவதாக த்ருமபுரம் குருஞான சம்பந்த மூர்த்திகள் ஆதீனமும் பதினறுவதாக திருப்பனந்தாளில் கிளை மடமாக இருக்கும் குமரகுருபர சுவாமிகளின் காசி மடமும், இருபதாவதாக சுவர்க்கபுர மடாதீனமும் ஏற்பட்டிருக்கிறது. இம்மடங்களில் சில சில காலங்களில் பெரிய பெரிய மஹான்கள் ஆதீன கர்த்தாக்களாக அமர்ந்திருந்திருக்கிறார்கள் இவைகள் தவிர இன்னும் அநேக மடங்கள் மெய்கண்டார் சந்தானத்தின் கீழ் இருந்ததாகவும் சில கல்வெட்டுகளால் தெரிகிறது.

10. இவ்வாதீனங்களில் திருவாவடுதுறை ஆதீனத்தின் குருதோத்திரமாவது :—

திருவாவடுதுறை.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
டயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு
நீடூழி தழைக மாதோ.

இதிலிருந்து ஷை ஆதீனத்தார் மெய்கண்டார் சந்தானத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர் அருளின "சிவஞானபோத" நெறியைப் பின்பற்றி ஒழுகி வருகிறவர்கள் என்றும் ஏற்படும்.

தருமபுரம் ஆதீனத்தின் குருதோத்திரமாவது :—

தருமபுரம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
சித்திநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்
ஞானசம்பந்தக் குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு
நீடூழி தழைக மாதோ.

இதிலிருந்து தருமபுர ஆதீனத்தார் மெய்கண்டார் சந்தானத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், " சிவஞான சித்தி " நெறியைப் பின்பற்றி ஒழுகிவருகிறவர்கள் என்றும் ஏற்படுகிறது.

மெய்கண்டார் வம்ச பரம்பரையும் காலமும்

11. அச்சுதகளப்பாளருடைய முன்னோர்களைப் பற்றியும் அவருடைய குமாரரான மெய்கண்டாரின் பின்னவர்களைப் பற்றியும் உள்ள வரலாறு தெளிவாகத் தெரியவில்லை மெய்கண்டாரின் முதல் மாணவரான அருணந்தி சிவாச்சாரியார், தம்முடைய குருநாதனை ஷை மெய்கண்டாரையும் அவர் அருளின சிவஞான போத நூலைப்பற்றியும் தாம் இயற்றிய இருபாஇரு பஃது என்ற நூலில் விவரித்திருக்கிறார் என்று தெரிகிறதே தவிர மற்ற குடும்பவிவரம் அவரால் தெரிவிக்கப்படவில்லை

12 சந்தான குரவர்களில் நான்காமவரான உமாபதி சிவாச்சாரியார் அவர்களும் மிகச் சிறந்த பக்தி நூலாகிய பன்னிரு திருமுறைகளில் ஒன்றான " பெரிய புராணம் " என்று வழங்கும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமான் வரலாற்றை எழுதியிருக்க, தமது குரவர்களான மறைஞானசம்பந்தர், சகலாகம பண்டிதர் என்கிற அருணந்தி சிவாச்சாரியார், மெய்கண்டார் ஆக இவர்களின் வரலாற்றைப் பற்றி எழுதாமல் இருந்ததின் காரணமும் தெரியவில்லை.

13. இனி மெய்கண்டாரின் காலத்தையும் வம்ச பரம்பரையின் வரலாற்றையும் ஆராய்வோம் :—

இப்பால் கிடைத்த ஒரு ‡செப்புப்பட்டயத்தில் *செஞ்சிக்கோட்டை அதிபதியான "காலிகாதேவி அருளும் வரப்பிரசாதமும் பெற்ற செஞ்சி ராவுத்தர் நல்லூருடையார்" என்பவரால் "பூபாலகனை அச்சுத அதகனுடப்பிள்ளை பெண்ணுமுடப்பிள்ளை" என்கிற ஒருவருக்கு "பள்ளிகொண்டான்பட்டணம், மீனர் கோட்டான். வடகரை. நந்திமங்கலம் ஆக 5 கிராமங்களுக்கு காவலும். மெய்காவல் அதிகாரமும் 18 விருதுகளும்" கொடுபட்டிருப்பதாகக் காணப்படுகிறது. அதில் கிராமம் 5 என்று கண்டிருந்தாலும் ஒரு கிராமத்தின் பெயர் இல்லை. நான்கு கிராமங்களின் பெயர் தான் குறிக்கப்பட்டிருக்கிறது. பெண்ணாகடம் என்கிற பெயர் அதில் காணப்படவில்லை. ஆனாலும் அதில் "அழகிய காதலி அம்மன் பாதம் அரிய ரெங்க

---

‡ஷை செப்பு பட்டயம் இதன் கடைசியில் இரண்டாவது அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* 11 முதல் 13 நூற்றுண்டுகளில் தென்னுடுகளில் ஒரு பகுதியை சோழமண்டலம் என்றும் சில பகுதியை சோழதேசம் என்றும் பிரித்திருக்கிறுர்கள் அவைகளில் **சோழமண்டலத்திற்கு "செஞ்சி"** தலைநகராகவும் **சோழ தேசத்திற்கு "தஞ்சாவூர்"** தலைநகராகவும் இருந்திருக்கிறது. (See page 29 History of Gingee by Sri C. S. Srinivasachariar). வெள்ளாற்றுக்கு வடக்கு பாகமான நடுநாடு என்கிற திருமுனைப்பாடி நாடு சோழமண்டலத்தில் சேர்ந்து அதற்கு தலைநகரமான செஞ்சி நகரத்தில் அக்காலத்தில் அதிபதியாக இருந்த உடையார் வம்சத்தவர்களால் இந்த செப்புப் பட்டயம் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

நாயகர் பாதம் சாக்ஷியாய் எழுதினது இது பள்ளி கொண்டான்பட்டணம் புஷ்பவனம் பெண்ணுகடம்" என்றும், "சன்னதி ஸ்தலமும் பதினெட்டு தொழிலாளியும் இந்த மூன்றுபேருக்கும் — பொதுவு" என்றும், கண்டிருக்கிறது. பெண்ணுகடத்திற்கு புஷ்பவனம் என்று ஒரு பெயர் உண்டு என்பதை முன்னுல் சொல்லப்பட்டிருக்கிறது பள்ளி கொண்டான் பட்டணம் என்றும் மற்ெருரு பெயரும் உண்டு. இப்போதும் பெண்ணுகடம் கீழ்பகுதியில் இருக்கிற சேனைத்தலைவர் ஜாதியார்கள் தங்கள் பொது கூட்டத்தின் நடவடிக்கைகளில் பெண்ணுகடம் என்று காணுமல் அதற்கு பதிலாக பள்ளி கொண்டான் பட்டணம் என்று எழுதிக்கொள்வது வழக்கமாக இருக்கிறது. ஆனுலும் பள்ளி கொண்டான்பட்டணம் என்கிற பெயர் இப்போது வழங்கவில்லை. ஆனுல் தற்காலத்தில் பெண்ணுகடத்தின் மேல்பாகத்தில் ஷை செப்புப் பட்டயத்தில் கண்டிருக்கிற பள்ளிகொண்ட பெருமாள் ஸ்ரீ பரிமள ரெங்கநாதன் ஆலயம் இப்போதும் இருக்கிறது. அதனுல், பெண்ணுகடத்தை பள்ளி கொண்டான்பட்டணம் என்றுவழங்கிவந்திருக்கலாம். "திருமலை அகரம்" என்கிற பெண்ணுகடத்துக்கும் நந்திமங்கலத்துக்கும்நடுவில் இருக்கிற ஊர் செப்புப் பட்டயத்தில் தவறுதலாக விடப்பட்டிருக்கலாம். அதில் கண்ட மற்ெருருகிராமமான "மீனர்கூட்டான்" என்கிற கிராமம் இப்போது நத்தப்பாழாக இருக்கிறது அந்த கிராமம் கி. பி 1892 ம் வருஷத்தில் நடந்த சர்வே செட்டில்மெண்டு காலம் வரையில் அந்தப் பெயரோடு இருந்திருக்கிறது இப்போதைய பெண்ணு

கடத்து எல்லையில் அப்போதிய மீனர்கூட்டான் கிராமத்திற்கு மேற்கில் அதாவது இப்போது பெண்ணை கடத்திலிருந்து வெள்ளாற்றுக்குப்போகும் பாதைக்கு அடுத்த மேற்கில் மெய்கண்டாரின் தகப்பனுரான அச்சுதகளப்பாளரின் அரண்மனை இருந்திருக்கிறது.

14. மேலே கண்ட செப்புப்பட்டய உத்திரவு சாலிவாகன சகாப்தம் பதின்மூன்றும் வருஷம். செல்லாநின்ற ஜெய வருஷம் வைகாசி மாதம் 23-ம் தேதி சுக்ரவாரத்தன்று பிறப்பிக்கப் பட்டதாகக் கண்டிருக்கிறது. அதற்கு சரியான வருஷம் கி பி. 90 அந்த செப்புப் பட்டயத்தின் நகலை சில அறிஞர்கள் பார்வையிட்டதில் அவர்கள் அதில் கண்டிருக்கிற வாசகமும், அதில் கண்டிருக்கிற தேதியும் இப்போதைக்கு சுமார் 1850 வருஷங்களுக்கு முன் உள்ளதாக இல்லை என்றும் அது பிற்பட்ட காலத்தியதாக இருக்கவேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிருர்கள். அதன் நகலைப் பார்வையிட்ட அறிஞர்களில் ஒருவரான திரு ஔவை சு. துரைசாமி பிள்ளை என்பவர் ஷை செப்பு பட்டயத்தில் கண்ட ' சாலிவாஹன சகாப்தம் பதின்மூன்று '' என்பதில் " பதின்மூன்று " என்று பொறிக்கப்பட்ட பதம் " பத்திமூன்று " என்று அசலில் தமிழ் இலக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்றும் " பத்தி மூன்று " என்பது 1003 என்றும் அதை செப்புப்பட்டயத்தில் தவறுதலாக " பதின்மூன்று " என்று பொறிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அபிப்பிராயப்படுகிருர். ஷை திரு ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்களின் அபிப்பிராயப்படி

ஷ்டி "பத்தி மூன்று" என்பது 1003 வருஷம் ஆகிறது. அதாவது அந்த செப்பேட்டில் கண்ட காலம் இப்போதைக்கு சுமார் 850 வருஷங்களுக்கு முன் ஆகிறது. அதில் கண்ட வசன நடையும் அந்தக் காலத்துக்குஒற்றுமையாக இருக்கிறதென்று அவர்களுடையவும் மற்ற அறிஞர்களுடையவும் அபிப்பிராயம்.

15. மெய்கண்டார் சகாப்தம், காஞ்சீபுரம் வண்ணக்களஞ்சியம் நாகலிங்க முதலியார் வெளியிட்ட சித்தாந்த சாத்திரம் பதினான்கின் முன்னுரையில், மெய்கண்டார் சிவஞானபோதம் அருளிச்செய்த காலத்தைக்குறிப்பிட்டபடி இப்போது 735 ம் வருஷம் என்று வழங்குகிறது. மேலே சொன்ன செப்புப் பட்டயத்தின் காலம் திரு ஔவை சு துரைசாமி பிள்ளை அவர்களின் அபிப்பிராயப்படி கணக்கிட்டுப் பார்த்தால் மெய்கண்டார் காலத்திற்குமுன் சுமார் 130 வருஷம் ஆகிறது. அதாவது செப்புப் பட்டயத்தில் கண்ட "பூபாலகன்" பெண்ணாகடம் "அச்சுத அதகனிடப்பிள்ளை பெண்ணுமுடைப்பிள்ளை" என்பவருக்குப் பெண்ணாகடம் முதலிய 5 கிராமங்களுக்கு இப்போதைக்கு சுமார் 850 வருஷங்களுக்கு முன் மெய்க்காவல் அதிகாரமும் 18 விருதுகளும் கொடுபட்டிருக்கவேண்டும். அவருக்குப்பின் வந்த அவருடைய சந்ததியார்களின் திறமையினால் அவர்கள் பல ஊர்களைப் பிடித்து அவர்கள் சிற்றரசாக ஆகி பிற்பட்டுக் கடைசியாகவந்த அச்சுதகளப்பாளர் ஓர் சிற்றரசாகவே வாழ்ந்திருக்கவேண்டும்.

16. மெய்கண்டாரின் தகப்பனார் அச்சுதகளப்பாளர் சிற்றரசாக இருந்திருக்கவேண்டும் என்பதற்கு

வேறு சில சான்றுகளும் உண்டு. இப்போதைக்கு சுமார் 300 வருஷங்களுக்கு முன் தொகுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் * " தமிழ் நாவலர் சரிதை " என்கிற நூலில், சேர சோழ பாண்டிய மன்னர்களான மூவேந்தர்களும் அச்சுதகளப்பாளரால் பிடிக்கப்பட்டு தளையிடப்பட்டபோது ஷை மூவேந்தர்களும் அச்சுதகளப்பாளர் போர் திறமையைப் போற்றிப் பாடியிருப்பதாக ஷை நூல் " தமிழ் நாவலர் சரிதை " யில் 154 முதல் 157 முடிய உள்ள பாடல்களால் ஏற்படுகிறது. இப்பாடல்களின் விபரம் :—

திணைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானுங்—கனைசீர்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை
அரசுணங்கு மச்சுதன் முற்றத்து.

— (சேரன்—154)

[உரை:— தினை சாகுபடி செய்கிற விவசாயிகளின் வீட்டின் முற்றங்களில் தினை வெய்யிலில் காய்ந்து கொண்டிருக்கும். நெல் சாகுபடி செய்பவர்களின் வீட்டின் முற்றங்களில் நெல் காய்ந்து கொண்டிருக்கும். அதுபோல அச்சுதகளப்பாளராஜாவின் அரண்மனை முற்றத்தில் வலிமையுடைய தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய இவைகளை உடைய அரசர்கள் தளையிடப்பட்டதனால் அவர்கள் வாடி வதங்கி, சோர்ந்து வருந்திக் கொண்டிருப்பார்கள். இவர்

---

* 1921-ம் வருஷத்திய பதிப்பு — பக்கம் 57 திரு. T கனகசுந்தரம் பிள்ளையால் தொகுக்கப்பட்டது.

களின் முரசும் சங்கமும் ஆரவாரம் செய்யாமல் உணங்கும்]

அரச குலதிலக னச்சுதன்முற் றத்தில்
அரச ரவதரித்த வந்நாள்—முரசதிரக்
கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்ற
வெட்டிவிடு மோசை மிகும். [ளையை

—(சோழன்—155)

[உரை :— அரசர்குலத்திற்கெல்லாம் திலகமாய் விளங்குகின்ற அச்சுதகளப்பாளராஜாவின் அரண்மனை முற்றத்தில் தளையிடப்பட்டிருக்கும் அரசர்களின் விலங்குகளை வெட்டிவிடுகிற ஓசையானது அந்த அரசர்கள் பிறந்தநாளின் கொண்டாட்டத்தில் முரசு களிலிருந்து எழும் ஓசையைவிட மிவுகம் அதிகமாக தோன்றியது]

குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராமன்
நிறையாறு திங்க ளிருந்தான்—முறைமையால்
ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன்
வாலிக் கிளையான் வரை.

—(பாண்டியன்—156)

[உரை;— தேர்ப்படை யானைப்படை, குதிரைப் படை காலாட்படை இவைகள் முறையே ஒலிக்கின்ற ஓசையின்ஆரவாரத்தையுடைய சேனைகளையும். மிகவும்) பிரகாசிக்கின்ற மாலையையும் உடைய அச்சுத களப்பாள அரசனே !

குறையுள்ளவர்கள் எங்கும் எக்காலத்திலும் இருக்கிறுர்கள், கூர்மையான வேல், அம்பு முதலிய வைகளையுடைய ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபுவும் வாலியின்

தம்பி சுக்கிரிவனுடைய மலைவாசத்தில் அவனுடனே ஆறுமாத காலம் தங்கியிருந்திருக்கிறார்]

பாண்டியன் இவ்வாறு திமிருடன் பாடிய பின்பு அவனுக்கு மற்றொரு விலங்கு அச்சுதகளப்பாளன் உத்திரவின்படி போடப்பட்டது.

பிறகு அவன் பாடியதாவது:—

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடவர் வடகடலென் றார்த்தார்—வடகடலர்
தென்கடலென்றார்த்தார் தென்றில்லையச்சுதாநின் றன்
முன்கடை நின்றார்க்கு முரசு

—(பாண்டியன்—157)

[உரை:— தென்தில்லை அச்சுதகளப்பாள அரசே! தங்களுடைய அரண்மனை வாசலில் ஆரவாரிக்கின்ற முரசின் ஒலியை மேற்கிலுள்ள மலைநாட்டார் கிழக்கடலின் ஓசை என்று சொல்வார்கள். அவர்களுக்கு இடப்பக்கத்தில் இருப்பவர்கள் இந்தமுரசின் முழக்கத்தை வடகடலின் முழக்கம் என்பார்கள். வடகடலைச் சேர்ந்தவர்கள் இந்த முழக்கத்தை தென்கடலின் ஓசை என்பார்கள் அச்சுதகளப்பாளன் முற்றத்தில் ஒலிக்கின்ற ஒலியானது எத்திசையிலும் ஒலிக்கின்ற ஒலியாம்.]

17. சமீப காலத்தில் ஸ்ரீ மு ராகவ அய்யங்கார் வெளியிட்ட **பெருந்தொகை** என்றநூலில் மூவேந்தர் பாடியமேலே கண்ட நான்கு பாடல்களுடன் அடியிற் கண்டதை அதில் 1006-ம் பாடலாக மற்றொரு பாடலையும் சேர்த்திருக்கிறார். ஆனால் அவருக்கு அந்த பாடல் எப்போது எங்கே கிடைத்ததென்பது தெரியவில்லை அந்தப் பாடலின் விபரம்:—

களப்பாளன் வெற்றிச் சிறப்பு

படுபருந்தும் சூர்ப்பேயும் பல்விலங்கு நாயும்
கொடியுங் கழுகுமிவை கூடி—வடிவுடைய
கோமான் களப்பாளன் கொல்யானை போமாறு
போமாறு போமாறு போம்.

[உரை:— மிக அழகும் வசீகரமும் உள்ள ராஜாதி ராஜனை அச்சுதகளப்பாள அரசனுடைய யானை முதலிய வீரப்படைகள் செல்கிற வழியிலேயே அவைகளால் தோற்கடிக்கப்பட்டு கொலையுண்டவர்களின் பிணங்களைத் தின்பதற்கு பருந்தும், பேயும், நரி முதலிய காட்டு விலங்குகளும் நாயும், காகமும், கழுகும் கூட்டங் கூட்டமாய் பின் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கும்.]

18 ஷை ஸ்ரீ. மு. ராகவ அய்யங்கார் வெளியிட்ட பல வித்வான்கள் பாடிய தனிப்பாடற் திரட்டு (இரண்டாம் பாகம்) என்கிற நூலில் 387-ம் பாடலில் அச்சுதகளப்பாளரின் சிறப்பு வெளியிடப் பட்டிருக்கிறது. அதைப்பாடியவர் யார் என்பதும், எக்காலத்தினர் என்பதும் தெரியவில்லை.

அந்தப்பாடல்:—

உழுமேழியாளன் களப்பாளனுத்தண்ட னேங்கு [வெற்பில்
எழுமேகமும் செலுமேவலவா வெனைத்தேடி மயில்
அழுமேதெரு நிற்கு மேயஞ்சுமே கொஞ்சியப்பனை [மேல்
விழுமேமறித்தெழு மேசென்றநாளை விரலெண்ணுமே

[உரை:—மேகத்தைக் கண்டு ஆனந்தம் அடைகிற மயில்கள், மேழிச்செல்வம் உடையவனும், உயர்ந்த மலைகளின் மேல்வசிக்கும் ஏழுமேகங்களும் பணி விடை செய்கிற கார்காத்த வேளாள மரபினரைச் சேர்ந்தவனும், உத்தண்டனுமாகிய களப்பாளன் இறந்த பிறகு, ஷை மேகங்களைக் காணுமையினால் அழும், தெருவில் நிற்கும். இனிக்காப்பாற்றுவதற்கு மனிதர் இல்லையென்று அஞ்சி வருந்தி நிற்கும். தங்கள் படுக்கை இடமாகிய மரக்கிளைமேல் சேர்ந்து விழும். பிற்பட்டு உடனே எழுந்திருக்கும். இவ்வாறு மயில் தன் நிகழ்ச்சிகளால் துக்கத்தை தெரிவிக்கும். அச்சுத களப்பாளர் இறந்து வெகுநாளானாலும் அவர் இப் பொழுதுதானே இறந்தார். அவர் இறந்த நாளை கை விரலால் எண்ணிவிடலாமே என்று வருந்தும்.]

இவ்வாறுமூவேந்தர்களும் மற்றகவிவாணர்களும் அச்சுதகளப்பாளரின் போர்த்திறமையையும், பெருமை யையும் போற்றியிருக்கிறார்கள்.

19. ஆனால் சரித்திர மூலமாய்ப் பார்க்கையில் சோழராஜ்ஜியத்தை *களப்பிரர் வம்சத்தைச் சேர்ந்த வர்கள் சுமார் 450 கி. பி.க்குபின் 550 கி. பி. வரையில் அதாவது சுமார் 1500 வருஷங்களுக்குமுன் ஆண்டு வந்ததாகவும் அவர்களில் **களபக்குல அச்சுத விக்கன்தன்** என்கிற ஒருவன் சிலவருஷங்கள் ஆண்டதாகவும் அவனால் சோழ, பாண்டிய ராஜாக் கள் தலையெடுக்கக்கூடாமல் அவர்கள் முறியடிக்கப்

* See page 14. The Tamil Kingdoms of South India (Short Studies in Indian History) by Sri K. A. Nilakanta Sastriar.

பட்டார்கள் என்றும் ஏற்படுகிறது. அதனுல் நாவலர் சரிதையில் கண்ட அச்சுதகளப்பாளன் ஷெ களப்பிரர் வம்சத்தில் சேர்ந்தவன் என்றும் மெய்கண்டாரின் தகப்பனுரான அச்சுத களப்பாளர் அல்லவென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள் ஷெ நாவலர் சரிதையில் கண்ட செய்யுள்களில் முதல் மூன்று செய்யுள்களில் **அச்சுதன்** என்ற வார்த்தை உபயோகித்து **அச்சுதகளப்பாளன்** என்கிற வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படா விட்டாலும் அதில் கண்ட நான்காவது செய்யுளில் **தென்திலே அச்சுதன்** என்றுகாணப்படுகிறது. ஐந்தாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் ஆரும் நூற்ருண்டின் முற்பகுதியிலும் இருந்த **களப்பிரர்** வம்சத்தைப்பற்றியாவது அந்த மன்னன் பெயரான **களபக்குல அச்சுதவிக்கன்தன்** என்கிற பெயராவது ஷெ செய்யுள்களில் காணப்படவில்லே. இதோடு மேலே சொன்ன பெருந்தொகை என்கிற நூலில் 1006ம் பாடலாக இருக்கிற களப்பாளன் வெற்றிச்சிறப்பு என்கிற பகுதியில் கண்ட செய்யுளில் "வடிவுடையகோமான் களப்பாளன்" என்று கண்டிருக்கிறது. மேலேகண்ட தனிப்பாடல் திரட்டு செய்யுளிலும் "உழுமேழியாளன், களப்பாளன் உத்தண்டன் ஓங்குவெற்பில் எழுமேகமும் செலுமே வலவா" என்று அடைமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அடைமொழிகள் கார்காத்த வேளாளர் வம்சத்தைச் சேர்ந்த மெய்கண்டாரின் தகப்பனுரான அச்சுத களப்பாளருக்கு பொருத்தமாக இருக்கிறது. களப்பிரர் வம்சத்தைச்சேர்ந்த களபக்குல அச்சுதவிக்கன்தன் என்பவனுக்கு மேலேகண்ட அடைமொழிகள் பொருத்தமாக இல்லே.

20. இனி கல்வெட்டு ஆராய்ச்சி மூலமாயும் சரித்திர ஆராய்ச்சி மூலமாயும் பார்ப்போம்.

(அ) *கோப்பெருஞ்சிங்கன் என்கிற காடவர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் நடுநாட்டில் திருநாவலூருக்கு எதிரில் அதாவது கெடில நதியின் தென் கரையில் சேந்தமங்கலத்தை தலைநகரமாக வைத்துக் கொண்டு சுமார் 1210 A. D. முதல் 1278 வரையில் நடுநாட்டில் அரசுபுரிந்திருக்கிருன். அவன் முதலில் ஹோயசலர் குடும்பத்திற்கும் சோழ வம்சத்திற்கும் விரோதமாகவும், பாண்டிய வம்சத்திற்கு நட்புடனும் இருந்தான். சோழஅரசன் 3வதுராஜராஜசோழனுக்கும் சுந்தர பாண்டியனுக்கும் நடந்தபோரில் மூன்ருவது ராஜராஜ சோழன் புறக்கணிக்கப்பட்டான். உடனே ராஜராஜ சோழன் ஹோயசலர் அரசன் இரண்டாவது நரசிம்மனுடன் சேர்ந்து பாண்டியனுடன் போர் புரிய ஏற்பாடு செய்து கொண்டிருக்கையில் கோப்பெருஞ்சிங்கன் பாண்டியனுக்கு உதவியாக தெள்ளாறு என்கிற இடத்தில் நடந்த போரில் 3-வது ராஜராஜசோழனை புறக்கணித்து அவனுக்கு தளையிட்டு அவனை சேந்தமங்கலத்தில் சிறையிட்டனன். அச் செய்தி திருவேந்திரபுரம் §கல்வெட்டிலிருந்தும் தெரி

---

* See foot note pages 34 to 36 History of Gingee and its rulers by Sri C. S. Sinivasachariar and See pages 35, 36 of The Tamil Kingdoms of South India (Short Studies in Indian History) by Sri K. A. Neelakanta Sastri

§ Tiruvendirapuram Becord - inscription 142 of 1902—of the 16th year of Raja Raja III furnishes the following particulars :—

கிறது. இது மூன்ருவது ராஜராஜசோழனின் 16-வது வருஷத்தில் (அதாவது கி பி. 1231) நடந்தது. உடனே ஹோயசல வம்சத்திய வீ இரண்டாவது நரசிம்மன் மூன்ருவது ராஜராஜ சோழனுக்கு உதவி புரிந்து கோப்பெருஞ் சிங்கனுடனும் பாண்டியனுடனும் 1231 A. D-ல் பெரம்பலூரில் *போர் நடத்தி வென்று மூன்ருவது ராஜராஜ சோழனை சிறையிலிருந்து விடுவித்தான். பிறகு சோழ, பாண்டிய, ஹோயசலர், காடவர் ஆக இவர்களுக்குள் ஒற்றுமைப்பட்டு ‡மன்னர்களுக்குள் கலப்பு மணமும் நடந்தது.

(ஆ) ஸ்ரீ மு ராகவய்யங்கார் தொகுத்த **பெருந் தொகை** என்கிற நூலில் 200ம் பக்கத்தில் திருவேள் விக்குடி சிலாசாஸனமாக கண்டிருக்கும் 10-ம் நூற்ருண்டில் இருந்த ஸ்ரீ அமிர்த சாகரர் **யாப்பருங்கலக் காரிகையில்**

---

* Page 36 The Tamil Kingdoms of South India (Short Studies of Indian History) by Sri K. A. Nilakanta Sastri.

‡ Dynastic marriagos sealed the peace among the Pandya, Chola and Hoyasala monarchs. —(ibid)

Last page continuation :—

Chola Emperor Raja Raja III was defeated and shutup a prisoner by Kopperunjingan at his Capital at Sendamangalam. The 16th year of Raja Raja III corresponds to 1231—1232 A. D.

"நாற்பெரும் படையும் பாற்படப் பரப்பி
கருதாதுவந்து எதிர்மலைந்த காடவனைக் காடடைய
பூவிரியும் புனற்கழனிக் **காவிரியின் தென்கரைமேல்**
தண்ணுகை மலர்ச்சோலை **பெண்ணுகடத்தமர்**
[வென்றும்"

என்று ஒரு அகவலில் கண்டிருக்கிறது. நாவலர் சரிதையில் கண்ட பாடல்கள் யாப்பருங் கலக்காரிகையில் சொல்லும் காவிரியின் தென்கரையிலிருக்கும் பெண்ணுகடத்தில் நடந்த போரையும் இதில் ஜெயித்த அரசனையும் குறிக்கும் என்றும் மற்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த அபிப்பராயமும் தவறு. *வரகுணபாண்டியன் என்கிற பாண்டிய ஜடிலபாரந்தகன் 765 to 815 கி பி. வரையில் பாண்டிய நாட்டை அரசு புரிந்திருக்கிறான். அந்தகாலத்தில் பல்லவ அரசனை இரண்டாவது நந்திவர்மன் என்பவன் கங்க நாட்டு அரசனை வென்று பிற்பட்டு காவிரி நதியின் தென்கரையிலிருக்கும் பெண்ணுகடம் என்கிற ஊரில் ஷை வரகுணபாண்டியனிடம் போரிட்டு புறக்கணிக்கப்பட்டதாகவும் தெரிகிறது. ஷை பல்லவ அரசனை காடவன் இரண்டாவது நந்திவர்மன் காலம் 757 முதல் 795 கி. பி. வரையில் என்று ஏற்படுகிறது. யாப்பருங் கலக்காரிகை எழுதின அமிர்தசாகரர் காலமும் சுமார் 1000 வருஷங்கள் ஆகிறது. அதனால் யாப்பருங்கலக்காரிகையில் கண்ட காடவன் யாப்பருங்கலக்காரிகை எழுதி சுமார் 300 வருஷங்களுக்கு பிற்பட்டு 1275-ம் கி. பி. காலத்தில் இருந்த கோப்பெருஞ்சிங்கனை குறிக்

* See page 20. The Tamil Kingdoms of South India (Short Studies in Indian History) by Sri K. A. Nilakanta Sastri.

காது. அதில்கண்ட **காடவன்** என்பது கோப்பெருஞ் சிங்கனுக்கு முன் சுமார் 500 வருஷங்களுக்கு முன் இருந்த இரண்டாவது நந்திவர்மனையும் அவன் நடத்திய போரையும் தான் குறிக்கும். இதனால் நாவலர் சரிதை யில் கண்ட செய்யுள்கள் ஷை நந்திவர்மனை குறிக்காது.

(இ) விருத்தாசலம் ஸ்ரீ பழமலைநாதர் கோயிலின் இரண்டாவது கோபுரமான *நடுகோபுரம் சோழ அரசன் ‡கண்டராதித்தன் மனைவியாரான செம்பியன் மகாதேவி அம்மையார் அவர்களால் கட்டப்பட்டது. ஷை கண்டராதித்தன் காலம் கி பி. 949 முதல் 956 வரையில் அதாவது இப்போது சுமார் 1000 வருஷங் கள் ஆகிறது. சரித்திரப்படி முதல் பராந்தக சோழன் காலம் 907 A D முதல் 949, ஷையார் குமாரன் **கண்டராதித்தன்** காலம் 949 முதல் 956, இரண்டா வது பராந்தகன் காலம் A D 956 முதல் 973, ஷை கண்டராதித்தன் மகன் உத்தம சோழன் காலம் A D

---

* ஷை நடுகோபுரத்தின் 8 உத்திரங்களில் 5 உத்தி ரம் நடுவில் முறிந்து கிலகமாய் இருப்பதனால் அவை கள் விழாமல் இருக்க, தாங்கலாக இரும்புக் கம்பிகள் சிமண்டு கருங்கல் ஜல்லி, மணல் இவைகளைக் கொண்டு (Reinforced concrete-னல்) உத்திரங் களுக்கு வளைவும் (arch-ம்) அதன் பக்கபலத்துக்கு தனிச் சுவரும், அஸ்திவாரத்தில் வளைவுமாக (arch) போட்டு இப்போது சென்ற இரண்டு மாதங்களாக சர்க்கார் அனுமதியின்பேரிலும் உதவியின்பேரிலும் திருப்பணி வேலை நடந்துகொண்டு வருகிறது.

— (Editor 29—9—1957)

‡ See pages 24 - 25. The Tamil Kingdoms of southern India (Short Studies — Indian History) by K. A. Nilakantasastri.

973 முதல் 985. இவர்களின் ராஜ்ஜிய பரிபாலனம் சுகமாக இல்லையென்றும் அதிலும் கண்டராதித்தன் அவருடைய மனைவி செம்பியன்மகாதேவி காலங்களில் ராஜ்ஜிய பரிபாலனத்தைவிட தெய்வ சந்நதிகளின் பரிபாலனம் அதிக கவனம் இருந்து வந்தது. "Gandaraditya and his queen Sembian Mahadevi are greater names in the domain of religion than in that of administration" ஷை கோபுரத்திற்கு ‡ கண்டராதித்தன் கோபுரம் என்று பெயர் என்று அந்த கோபுரத்தில் இருக்கிற ஒரு கல்வெட்டினால் தெரிகிறது.

(ஈ) ஷை கோபுரத்தில் இருக்கிற மற்றொரு கல்வெட்டிலிருந்து (Inscription 73 of 1918) பெரம்பலூரில் நடந்த போரில் ஹொய்சல ராஜாவினுடைய சில நாய்க்கர்களை **கோப்பெருஞ்சிங்கன்** கொன்றதற்காக சில தர்மங்கள் செய்துவைத்த விவரம் கோப்பெருஞ்சிங்கன் 10-வது ஆண்டு சிம்மம், பஞ்சமி திங்கட்கிழமை, ரேவதி என்று கண்டிருக்கிறது. அதில் கண்ட காலம் 1241 A. D. ஆகிறது. ஷை நடு கோபுரம் சுமார் 950 A D-க்குப்பின் கட்டப்பட்டிருப்பதால் பெரம்பலூரில் நடந்த ஷை போரின் சம்பவம் அந்த கல்வெட்டில் கண்டபடி 1241 A D ஆக இருக்கலாம்.

(உ) திருக்காட்டுப்பள்ளி சிவசாமி அய்யர் கலாசாலையில் தலைமை உபாத்தியாயராக இருந்த *ஸ்ரீ கே. ஆர். பாலசுப்ரமணிய அய்யர் ஷை கோப்பெருஞ்

---

‡ Inscription 74 of 1918.

* அவர் ஆராய்ச்சி மதராஸ் யூனிவர்சிடி ஜர்னல் வால்யூம் 8, 9-ல் வெளியிடப்பட்டிருக்கிறது

சிங்கன் வரலாற்றை ஆராய்ச்சி செய்து ஷை கோப் பெருஞ்சிங்கன் காலத்தையும் அவன் சோழ, பாண் டிய, கர்னுடக ஆந்திர தேசங்களின் அரசர்களை வென்ற விவரத்தையும் அவர் எழுதியிருக்கிருர். அதி லும் கோப்பெருஞ்சிங்கன் காலம் சுமார் 1230 முதல் 1280 வரையில் என்று காணப்படுகிறது.

(ஊ) ‡பாண்டியமன்னன் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 1251 கி. பி.-யில் பட்டத்துக்கு வந்தார். அவர் 1251-லிருந்து 1262-க்குள் சேர மன்னனையும் பிறகு சோழ தேசத்து மன்னன் ராஜேந்திரனை (மூன் ருவது) யும் ஜெயித்து சோழதேசத்தில் ஒரு பாகத் தையும் பிடித்துக்கொண்டார் சிதம்பரம் ஸ்ரீநடராஜா கோவிலில் இரண்டாவது பிரகாரம் வடபுரம் சுவரில் இருக்கிற *கல்வெட்டு ஒன்றில் பாண்டியன் ராஜா ஜடாவர்மன் என்கிற திரிபுவன சக்ரவர்த்தி சுந்தர பாண்டிய தேவன் காலத்தில் திருச்சிற்றம்பல மாகாளிக்கு திருநாமத்துக் காணியாக "களப்பாள ராயர்" உத்திரவுப்படி சில நிலங்கள் விடப்பட்ட தாகக் கண்டிருக்கிறது.

மேலே கண்ட திருவேந்திரபுரம் கல்வெட்டு (Incription 142 of 1902), ஸ்ரீ C. S. ஸ்ரீநிவாசாச் சாரியார் செஞ்சி சரித்திரம் (History of Gingee &

‡ Epigraphy G. O. 920 dated 4—8—1914 Stone inscription 297 copied in 1913 and page 37 of The Tamil Kingdoms of South India by Sri K. A. Nilakanta Sastri.

* Inscription 297 of the abovesaid G. O. No. 920 dated 4—8—1914

its rulers by Rao Bahadur C. S. Srinivasa-chariar), ஸ்ரீ K. A. நீலகண்ட சாஸ்திரிகளின் தமிழ் நாட்டு ராஜாங்கங்கள் சரித்திரம் (The Tamil Kingdoms of South India, in the Short Studies in Indian History) இவைகளிலிருந்து மூன்றாவது ராஜ்ராஜசோழன் காலம் சுமார் 1216 A D முதல் 1243 A D வரையில் என்றும் முதல் சௌந்திர பாண்டியன் என்கிற ஜடாவர்மன் சௌந்திரபாண்டியன் காலம் சுமார் 1250 A D முதல் 1268 A D வரையிலும் என்றும் ஏற்படுகிறது.

21. தென்தில்லை அச்சுதன் என்று மேலே சொன்ன மூவேந்தர் பாடல்களில் ஒன்றில் காணப்படுகிறது. தென்தில்லை என்றதனால் வடதில்லை என்று ஒரு ஊர் இருக்கிறதா வென்கிற சந்தேகம் ஏற்படலாம். வடதில்லை என்று ஓர் ஊர் இருந்ததாகவாவது, இருப்பதாகவாவது தெரியவில்லை.

"தென்" என்கிற சொல்லுக்கு அழகு என்று பொருள். அதனால் தென்தில்லை என்பது அழகான சிதம்பரம் என்று பொருள் படுகிறது.

ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமான் திருவாசகத்தில் போற்றித்திருஅகவல் என்கிற பகுதியில்

"தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரா அமுதானாய் போற்றி"

என்று சிதம்பரத்திற்கு தென்தில்லை என்கிற சொல்லை உபயோகப்படுத்தியிருக்கிறார்.

இதனால் தென்தில்லை என்கிற பதம் சிதம்பரத்தையே குறிக்கிறது.

22 ' தென்தில்லை அச்சுதன் " என்று மூவேந்தர் பாடல்களில் ஒன்றில் காணப்படுவதாலும், களப்பாளராயரின் உத்திரவின்படி திருச்சிற்றம்பல மாகாளிக்கு திருநாமத்துக் காணியாக சில நிலம் முதல் சௌந்திர பாண்டியன் காலத்தில் விட்டிருப்பதாகச் சிதம்பரம் கல்வெட்டில் இருப்பதாலும் அச்சுதகளப்பாளராயர் என்றவர், பதின்மூன்ரும் நூற்ருண்டில் கோப்பெருஞ்சிங்கனின் கீழ் ஓர் சிற்றரசாக இருந்திருக்கவேண்டுமென்றும், ஷை கோப்பெருஞ்சிங்கன் சோழமன்னரைப் புறக்கணித்து வெற்றிபெற்று சோழமண்டலத்தில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக்கொண்ட காலத்தில், சிதம்பரமும் அப்படிக் கைப்பற்றின பாகத்தில் சேர்ந்திருக்கலாமானதாலும், ஷை சிதம்பரம் மிகவும் சிறந்த க்ஷேத்திரமானதாலும், ஷை களப்பாளராயன் சிதம்டரம் திருச்சிற்றம்பல மாகாளிக்கு திருநாமத்துக் காணியாக மேலே கண்ட தானம் கொடுத்திருக்கலாமென்றும் ஏற்படுகிறது. அது காரணத்திஞலேயே ஷை அக்சுதகளப்பாளராயனை "தென்தில்லை அச்சுதன்" என்று நாவலர் சரிதையில் கண்ட மூவேந்தர் பாடல்களில் காணப்படலாம்.

23 மெய்கண்டாரின் அன்னையார் அவர்களும் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். இப்போது சுமார் 100 வருஷங்களுக்கு முன் இருந்ததாக சொல்லப்படுகிற சைவ எல்லப்ப நாவலர் என்பவர் இயற்றிய திருவெண்காடு தலப்புராணத்தில் மெய்கண்டதேவரின் அம்மான் பெயரை "வெண்ணெய் நல்லூர் **காங்கய பூபதி**" என்று குறிப்பிட்டிருக்கிருர்: அவரை "பூபதி" என்று குறிப்பிட்டதஞலேயே அவரை அரச வம்சத்தைச் சேர்ந்தவர் என்ரு

வது அல்லது அதற்குச் சமானமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ருவது சொல்லவேண்டும். திருவண்ணுமலை கோயிலில் இருக்கிற ஒரு *கல்வெட்டு சாஸனத்தில் ஷை கோப்பெருஞ்சிங்கன் "ஆட்கொண்ட தேவன், கடகரி முனைமுகங்கடந்த **காங்கயன்** " என்கிற இருவர்களும் அண்ணுமலையாருக்குச் செய்த திருப்பணி யாவையும் ஓரே அகவலில் விரித்துரைக்கப் பட்டிருக்கிறது. ஷை அகவலில் **காங்கயன் மடமும்,** **காங்கயன்** தடாகமும் இன்னும் அநேக தர்மங்களும் **காங்கயன்** பெயரால் காணப்படுகிறது. ஷை கல்வெட்டு அகவலில் முன்பாகத்தில் கோப்பெருஞ்சிங்கன் தர்மங்களைச் சொல்லிவிட்டு பிற்பட்டு "ஆட்கொண்டதேவன் கடகரிமுனை முகங்கடந்த காங்கயன்" என்று குறிப்பிடுகிறதில் "ஆட்கொண்டதேவன்" என்பது சுந்தரமூர்த்தி நாயனரைத் தடுத்து ஆட்கொண்டது திருவெண்ணெய்நல்லூர் நாதன் ஆனதால் அந்தசொல் திருவெண்ணெய்நல்லூரையும், "கடகரி முனைமுகங்கடந்த" என்பதனுல் அவன் யானைப்படைக்கு சேனதிபதியாக இருந்திருக்கவேண்டும் என்றும், "**காங்கயன்**" என்று இருப்பதினுல் அவன் பெயர் **காங்கயன்** என்று இருக்கவேண்டுமென்றும் நம்ப இடந்தருகிறது. ஓரே கல்வெட்டு அகவலில் கோப்பெருஞ்சிங்கன், காங்கயன் ஆக இருவர் செய்த தர்மங்களை எடுத்துச் சொல்வதினுல் காங்கயன் என்பவனும் கோப்பெருஞ்சிங்கன் காலத்தவனுக இருக்கவேண்டும். காங்கய பூபதியின் தர்மங்

---

* Inscription 480 of 1902. இது ஒரு அகவல். இதே அகவல் வேலூரிலும் காணப்படுகிறது.

கள் கோப்பெருஞ்சிங்கன் தர்மங்களைவிட மிகவும் அதிகமாக ஷை கல்வெட்டில் கூறப்படுகிறது. மேற்படியார்கள் இருவரும் சைவசமயத்தில் மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள் என்றும் ஷை கல்வெட்டிலிருந்து ஏற்படுகிறது. மெய்கண்டாரின் அம்மான் காங்கயபூபதி என்று எல்லப்ப நாவலர் சொல்வதிலிருந்து மெய்கண்டாரின் தாயார் ஷை அகவலில் கண்ட காங்கயபூபதியின் சகோதரியாகவும், அச்சுதகளப்பாளருக்கு அருமைமனையாளுமாகவும் இருந்திருக்கலாம். காங்கயபூபதி அக்காலத்திய ஓர் சிற்றரசராகவோ அல்லது பெரிய குடித்தனக்காரராகவோ இருந்திருக்கவேண்டும்.

24. ஷை காங்கயபூபதி என்பவர் கம்பநாடரால் புகழ்பெற்ற சடையப்ப வள்ளல் பரம்பரையாக இருக்கவேண்டும் என்றும் திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் மெய்கண்டார் மடத்து சந்நதி தெருவில் வடசராகத்தில் இருக்கும் மனையை சடையப்பவள்ளல் இருந்த இடமென்றும் அது மெய்கண்டார் முன்னோர்களின் வாசஸ்தலமென்றும் ஷை ஊரில் உள்ளவர்கள் கர்ணபரம்பரையாக சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

25. திருவாவடுதுறை ஆதீன தற்கால வித்வான்களில் ஒருவரான ஸ்ரீ தெ. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் எழுதிய "இருபா இருபது" விளக்கக் கட்டுரையில் ஸ்ரீ அருணந்தி சிவாசாரியாரின் வரலாற்றில் மெய்கண்டாரின் தாயாரின் பெயர் "மங்களாம்பிகை" என்றும் இவர் கம்பரைக் காத்தளித்த சடையப்ப வள்ளலாரின் மகனாகிய காங்கயபூபதியின் தங்கையார் என்றும் எழுதியிருக்கிறார். அதற்கு ஆதாரம் ஒன்றும் அவர்

காட்டவில்லை. ஆனால் கம்பநாடர் காலம் சோழ அரசன் *மூன்றும் குலோத்துங்கன் காலம் என்றும், அது 1178 கி. பி முதல் 1218 கி. பி வரையில் என்றும் தெரிகிறது. மெய்கண்டார் அவதாரம் சுமார் 1260 கி. பி. என்று கணக்கிடப்படுகிறபடியினால் மெய்கண்டாரின் அன்னையார் சடையப்ப வள்ளலின் குமாரத்தியாகவும், காங்கயபூபதி குமாரராகவும் இருக்க முடியுமாவென்று சந்தேகிக்க வேண்டியதாகயிருக்கிறது.

26. திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலின் மகளை நம் அச்சுதகளப்பாளர் மணந்துகொண்டார் என்று சைவத்திரு. மறைமலை அடிகளார் சொல்வது அவரவர்கள் இருந்த கால வேறுபாட்டினால் பொருத்தமாக இல்லை என்று திரு. †ஔவை துரைசாமிப்பிள்ளையும் அபிப்பராயப்படுகிறார்.

27. சோழமன்னர்கள் பெரும்பாலும் கார்காத்த வேளாளர் வம்சங்களின் பெண்களை மணம் செய்துகொண்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. அது காரணத்தினாலேதான் சோழ மன்னர்களுக்கு முடிசூட்டுங்கால் கார்காத்த வேளாளர்கள் அந்த முடியை, அதாவது கிரீடத்தை கொடுக்கிறது வழக்கம்போலும் மேலே 28-வது பக்கத்தில் கண்டபடி 1231 A D-ல்

---

* See pages 34 & 35 The Tamil Kingdoms of South India by Sri K. A. Nilakanta Sastriar

†பக்கம் 18, 19. மெய்கண்டார் வரலாற்றாராய்ச்சி "மெய்கண்டார் சிவஞான போதம் மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும்" — பதிப்பாளர், ஔவை துரைசாமிப்பிள்ளை.

நடந்த போருக்குப்பின்பு சேர, சோழ பாண்டியன் ஹோயசல காடவர் அரசர்களுக்குள் நடந்த கலப்பு மணத்தில் கோப்பெருஞ்சிங்கன் மூன்ருவது ராஜராஜ சோழனின் சகோதரியை கி. பி. 1231-ல் நடந்த போர் முடிந்தவுடன் †மணம் செய்துகொண்டிருக்கலாம். இவர்களுக்கு பிறந்த மகளிரை அச்சுதகளப்பாள அரசர் சுமார் 1250 A D-ல் மணம் செய்துகொண்டிருக்கலாம். அச்சுதகளப்பாளருக்கு சுமார் 10 வருஷ காலம் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்து தன் குலகுருவான சகலாகம பண்டிதர் என்கிற அருணந்தி சிவாசாரியார் அவர்கள் தேவாரத்தில் கயறு சாத்திக் கண்டபடி திருவெண்காட்டுக்குப்போய் சுவேதவன ஈஸ்வரரை வழிபாடு செய்த பிறகு மகப் பேறு 1260-ம் ஆண்டில் பெற்றிருக்கலாம். அதன் பிறகு பாண்டிய அரசன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251 A D to 1268 A D) 1262 A D-ல் சேந்தமங்கலம் கோப்பெருஞ்சிங்கன் பேரில் படையெடுத்து நடந்த போரில் *கோப்பெருஞ்சிங்கன் தோல்விபுரிந்து சௌந்திர பாண்டிய ஜடாவர்மனிடம் சிற்றரசாக இருக்க சம்மதப்பட்டான். அந்தப்போரில் அதாவது 1262 A D-ல் கோப்பெருஞ்சிங்கன் தோல்வியுற்ற போரில் அச்சுதகளப்பாளர் வீரசொர்க்கம் அடைந்திருக்கவேண்டும். உடனே அவர் மனைவியாரான

---

† திரு. வெள்ளைவாரணர் (அண்ணமலை பல்கலைக் கழகம் ஆராய்ச்சியாளர்), சோழவம்சத்தின் மகளிரை கோப்பெருஞ்சிங்கன் மணம் செய்துகொண்டதாக தன் ஆராய்ச்சியில் தெரிகிறதாக சொல்கிருர்.

* Page 37—The Tamil Kingdoms of South India by Sri K. A. Nilakanta Sastriar

மெய்கண்டாரின் தாயார் உயிர் நீத்திருக்கலாம். இம் மாதிரி தருணத்தில் மெய்கண்டாரின் இரண்டாவது ஆண்டில் அவரை, அம்மான் திருவெண்ணெய்நல்லூரில் தன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போயிருக்கலாம் மெய்கண்டார் இரண்டாவது ஆண்டில் அம்மான் வீட்டிற்கு எடுத்துப்போகப்பட்டார் என்று வழங்குவதனால் 1262 ல் நடந்த போரில் அவருடைய தகப்பனார் வீரசொர்க்கம் அடைந்திருக்கவேண்டும் என்று தீர்மானிக்கலாம்

28. ஆராய்ச்சிக்காரர்களும் கோப்பெருஞ்சிங்கன் என்கிற அரசரின் குமாரனுக்கும் கோப்பெருஞ்சிங்கன் என்று பெயர் இருந்ததாகவும், தகப்பனருக்குப் பின் மகன் *கோப்பெருஞ்சிங்கன் தகப்பனர் அரசு புரிந்து வந்ததுபோல் மகனும் அரசுபுரிந்து வந்ததாகவும் அபிப்ராயப்படுகிறார்கள். அப்படியிருந்தால் மேலே 20-வது பாராவில் கண்ட திருவண்ணாமலை கல்வெட்டு சாஸனத்தில் (Inscription 480 of 1902) சொல்லியிருக்கும் காங்கயன் என்பவன் "மகன் கோப்பெருஞ்சிங்கனை" இரண்டாவது கோப்பெருஞ்சிங்கனாகவும், தகப்பனாரைவிட மகன் தர்மத்தில் ஈடுபட்டவனாகவும், அதனால் ஷை இருவர்களும் செய்த தர்மங்களை ஒரே அகவலில் (கல்வெட்டு) காணப்பட்டிருக்கிறதென்றும் அபிப்ராயப்படலாம். அப்படியானால் ஷை அகவலில் காணப்பட்ட காங்கயபூபதி என்பவர் முதல் கோப்பெருஞ்சிங்கனின் குமாரன் என்று ஏற்படுகிறது. ஷை காங்கயன் மெய்கண்டா

---

* See foot note — page 36. History of Gingee by Sri C. S. Srinivasachariar.

ருக்கு அம்மாளுகை அதாவது மெய்கண்டாரின் தாயார் முதல் கோப்பெருஞ்சிங்கனின் குமாரத்தியாக இருக்க லாமாவென்று எண்ண இடம் தருகிறது.

29 உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய "சங்கற்ப நிராகரணம்" என்ற நூலில் பாயிரத்தில் (அகவல் வரி 26 27)

" ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்ப..."

என்று அந்த நூல் செய்த காலத்தைச் சாலிவாகன சகாப்தம் 1235 என்று சொல்கிறார். அதாவது அக் காலம் 1313 A D ஆகிறது. இதிலிருந்து அருணந்தி சிவாச்சாரியாருக்கும் உமாபதி சிவாச்சாரியாருக்கும் நடுவில் மறைஞானசம்பந்த சிவாசாரியார் காலத்துக்கு சுமார் 30 வருஷம் வைத்துக்கொண்டாலும் மெய் கண்டார் காலம் சுமார் 1280 A D ஆக இருக்கலாம்.

30 திரு மெய்கண்டார் காலமும், மரபும் திருச் செங்காட்டாங்குடியில் இருக்கும் மற்றொரு செப்புப் *பட்டயத்திலிருந்தும் தெரிகிறது. சாலிவாகன சகாப் தம் 1225-க்கு கலியுகம் 4444 மேல் செல்லா நின்ற விக்ரம வருஷம் தைமீ 15௳ பூச நக்ஷத்திரம் பஞ்சமி திதி கூடிய புண்ய தினத்தில் திருச்செங்காட்டாங்குடி யில் கார்காத்தார் மரபினருக்காக ஒரு வீடு வாங்கி

* ஷை செப்புப் பட்டயம் இதில் 3-வது அநுபந்த மாக சேர்க்கப்பட்டிருக்கிறது.

அசல் பட்டயம் இப்போது திருச்செங்காட்டாங் குடியில் மேலவீதியில் மேல்சரகில் இருக்கும் கார்காத் தார் மடத்தில் தற்காலம் வசிக்கும் முத்தய்ய தேசிகர் வசம் இருக்கிறது.

மடமாக விடப்பட்டிருக்கிறது. ஷ செப்புப்பட்ட யத்தில் கார்காத்த வேளாளர் பெருமை என்ற தலைப்பில் "காருக்கு பிணை ஏற்று காலில் சிறை விடுத்த வீரியர், கோபக்காராளர், பாண்டி மண்டல பிரதாபர், விருத்தாசலதிரியர், இருக்கோண பாண்டி வளநெட்டரியர், தேவநெட்டரியர், மணிமுத்தாநதி பிரதாபர், ஆயிரத்தெட்டு (1008) சிவஸ்தலத்திலும் உள்ள பெரியோர், மூவேந்தரை ஜெயங்கொண்ட வீரியர், மும்முரசு முழக்க மணிவாலுடையோன், பொற்காட வாத பூஜினர், சைவபரிபாலனர் **மெய்கண்ட சிவாசாரியார்......**" என்று கண்டிருக்கிறது ஷ செப்புப் பட்டயத்தின் நகலிலிருந்து சாலிவாஹன சகாப்தத்தை வைத்து கணக்கிட்டால் செப்புப்பட்டய தேதி இப்போது நிகழும் 1957 A D-க்கு சுமார் 654 வருஷம் ஆகிறது இதிலிருந்து மெய்கண்டார் சுமார் 660 வருஷங்களுக்குமுன் இருந்திருக்கவேண்டும் அதில் மூவேந்தரை ஜெயங்கொண்ட வீரியர் என்பது மெய் கண்டாரின் தகப்பனுர் அச்சுதகளப்பாளரையும், சைவ பரிபாலனர் என்பது மேலேகண்ட மெய்கண்டாரையும் குறிப்பதாகவும் கருதப்பட வேண்டியதாக இருக்கிறது

31. மேலே 24, 25-வது பக்கங்களில் கண்ட "உழுமேழியாளன் களப்பாளன் உத்தண்டன்...." என்கிற பாடலானது தொண்டைநாடு செங்கற்பட்டு வட்டம் தையூர் கிராமத்தில் உத்தண்டன் என்னும் களப்பாளர் ஒருவர் பதினைந்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இருந்ததாகவும் அவரைப் பாராட்டி ஒரு

புலவர் *உத்தண்டன் கோவை என்று ஒரு நூல் எழுதியிருப்பதாகவும், அதில் ஷை பாடல் காணப்படுகிறதென்றும், அதனால் ஷை பாடல் பெண்ணாகடம் அச்சுதகளப்பாரைக் குறிக்காது என்று திரு. ஔவை துரைசாமிப்பிள்ளை அபிப்பராயப்படுகிறார்.

32. மேலேகண்ட கல்வெட்டு சிலாசாசனங்களிலிருந்தும், செப்புப்பட்டயங்களிலிருந்தும், ஷை சரித்திரங்களிலிருந்தும், மேலேகண்ட ஔவை துரைசாமிப்பிள்ளையின் அபிப்ராயப்படி உத்தண்டன் கோவை பாடலை நீக்கி மற்றவைகளிலிருந்தும், மூவேந்தர்பாடல்கள் இவைகளிலிருந்தும், உமாபதிசிவம் அருளின சங்கற்பநிராகரணம் என்ற நூலிலிருந்தும், மெய்கண்டார் சகாப்தம் வழங்குவதிலிருந்தும் மெய்கண்டதேவரின் தகப்பனார் அச்சுதகளப்பாளர் ஷை கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அவனுக்கும் கீழ் ஓர் சிற்றரசனாக இருந்திருக்கவேண்டும் என்றும், அச்சுதகளப்பாளனே மூவேந்தர்களையும் வென்றிருக்கவேண்டும் என்றும், சேனாதிபதிகள் போரில் வென்றாலும், அந்த வெற்றி பெரிய அரசனைச் சேர்வதுபோல் அச்சுதகளப்பாளன் வெற்றி கோப்பெருஞ்சிங்கனுடைய வெற்றியாகச் சரித்திரக்காரர்களால் சொல்லப்பட்டிருக்கலாம் என்றும் நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. இதோடு மெய்கண்டார் காலமும் 1230 A. D.-க்குமேல் 1280 A. D.-க்குள் இருக்கலாம் என்றும் தெரிகிறது.

---

* 39 40-வது பக்கம் — மெய்கண்டார் வரலாற்றாராய்ச்சி — சிவஞானபோத மூலமும் சிற்றுரையும்.
— பதிப்பாளர் ஔவை துரைசாமிப்பிள்ளை.

இந்த விஷயம் அந்த பாராக்கள் அச்சிட்டபிறகு அடியேனுக்கு தெரிந்தது. — எடிட்டர்.

33. மெய்கண்ட தேவரின் தகப்பனார் அச்சுத களப்பாளர் என்பவர் பெண்ணாகடத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக பெண்ணாகடத்தில் இப்போதும் களப்பாளராஜா வசித்திருந்த அரண்மனை வகையரு கட்டடங்கள் இருந்து அழிந்த இடத்திற்கு "களப்பாள மேடு" என்ற பெயருடன் உள்ள சுமார் 50 ஏக்கர் நிலமும் இருக்கிறது. திருவெண்காட்டில் "முக்குளம்" என்பதுபோல் பெண்ணாகடத்திலும் "முக்குளம்" என்ற குளமும் இப்போதும் இருக்கிறது. தவிர பெண்ணாகடத்திலும் மற்றும் சில ஊர்களிலும் களப்பாளப்பிள்ளை என்ற பட்டப்பெயருள்ள கார்காத்த வேளாளர்கள் இப்போதும் இருக்கிறார்கள். இதோடு அச்சுதகளப்பாள ராஜாவின் கீழ் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தவர்களின் அதிகாரப்பட்டங்களான குருகுலராயர், கனகராயர், வாணதிராயர், பிரதானீகம், தளகர்த்தம், சம்பிரதியர் முதலிய பட்டம் உடைய வம்சங்கள் பெண்ணாகடத்தில் இப்போதும் இருக்கின்றன. தவிர மேலே விவரித்த திருச்செங்காட்டாங்குடி கார்காத்தார் மடத்து செப்புப்பட்டயத்திலிருந்தும் மேலே சொன்ன நாவலர் சரிதையிலிருந்தும், பெண்ணாகடத்தில் வழங்கும் கர்ண பரம்பரையிலிருந்தும், திருவாரூர் ஸ்ரீ சாமிநாத தேசிகர் இயற்றிய சந்தானாச்சாரிய புராண சங்கிரகத்திலிருந்தும் மெய்கண்டார் காராளர் மரபு என்று சொல்லலாம்.

34. மேலே 5-வது பாரா, 10-வது பக்கத்தில் அச்சுதகளப்பாளர் திருவெண்காட்டிலிருந்து பெண்ணாகடத்திற்கு திரும்பி வந்த பிறகு அவருக்கு பெண்ணாகடத்திலே குழந்தை பிறந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் திரு. ஔவை

துரைசாமிப் பிள்ளை * " அச்சுதகளப்பாளருடைய மனைவியார் திருவெண்காட்டிலேயே கருவுயிர்க்கும் வரையில் தங்கி இறைவனை வழிபட்டார். அங்கேயே ஓர் ஆண்மகவை கருவுயிர்த்தனர். பின்பு களப்பாளர் தம் மனைவியாரோடும் திருமகனோடும் உற்றார் உறவினர் உடன்வரத் திருப்பெண்ணாகடம் வந்து சேர்ந்தார்." என்றுசொல்லிவிட்டு பிறகு அவர் †வரலாற்றாராய்ச்சியில் 10 வது பாராவில் " அச்சுதகளப்பாளருடைய மனைவியார் மெய்கண்டதேவரைக் கருக்கொண்டபோது திருவெண்காட்டில் இருந்தாரென்பது உண்மை; கரு முதிரத்தொடங்கியதும் அவர் பெண்ணாகடம் சென்று சேர்ந்தாரென்பதே பொருத்தம் " என்றும் சொல்லி ஆனால் " சைவசந்தானசிரியர் புராணம் மெய்கண்டார் திருவெண்காட்டிலே பிறந்தார் " என்றும் பிறகு குழந்தையுடன் அச்சுதகளப்பாளர் ' பிள்ளையொடு நன்மனைவியும் சுற்றமும் பிறரும் ....தண்கடந்தை............இடத்து மேவினர்" என்றும் சொல்கிறதை ஆதாரமாகவும் காட்டுகிறார். இதோடு சிவஞானமாமுனிவர் அருளிய "சிவஞானமாபாடிய வெளியீட்டின்கண் மெய்கண்டதேவரது சரித்திர சுருக்கத்தில்......மகப்பேற்று சடங்குகளும் பெயரீடும் திருவெண்காட்டிலே நிகழ்ந்தன என்றனர்" என்றும் சொல்கிறார். சந்தானசாரியார் புராணம் இயற்

* பக்கம் 13 — மெய்கண்டதேவர் வரலாறு — சிவஞான போத மூலமும் சிற்றுரையும்.
— பதிப்பாளர் ஔவை துரைசாமிப்பிள்ளை.

† பக்கம் 21, 22 — மெய்கண்டார் வரலாற்றாராய்ச்சி—சிவஞானபோத மூலமும் சிற்றுரையும்.
—பதிப்பாளர் ஔவை துரைசாமிப்பிள்ளை

றியவர் திருவாரூர் * ஸ்ரீ சாமிநாத தேசிகர். இவர் மகா வித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய முதல் மாணவராகிய தியாகராஜ செட்டியாரின் மாணவர். இவர் 1857 A D முதல் சில வருஷங்கள் பாடம் கேட்டவர். 1894 A D-ல் திருவாரூர் புராணத்தை பரிசோதித்து அச்சிட்டவர். அதனால் இவர் காலம் சுமார் 1845 A D முதல் 1900 A D வரையில் என்று சொல்லலாம். இதன் நடுவில் இவர் சந்தானாசாரிய புராணத்தை இயற்றியிருக்கவேண்டும். இவர் எளிய இனிய நடையிலும் தாம் பாட நேர்ந்த திருவருள் வாய்ப்பை எண்ணி மனத்தே மகிழ்ச்சி கொண்டு சிறந்த பாடல்களாக பாடியிருந்தாலும் அதில் சொல்லும் நிகழ்ச்சிகளுக்கு அவர் ஆதாரம் காட்டவில்லை இவர் சமீப காலத்தவர். பெண்ணாகடத்திற்கோ அல்லது திருவெண்ணெய்நல்லூருக்கோ அண்மையில் இருந்தவரல்ல. அதனால் அவர் மெய்கண்டாரை திருவெண்காட்டிலேயே கருவுற்றார் என்றும் அங்கேயே பிறந்தார் என்றும் சொல்வதை ஆதாரமாக எடுத்துக்கொள்வதற்கில்லை. சிவஞான பாடியக்காரரான சிவஞான மாமுனிவர் அவர்கள் மெய்கண்டார் திருவெண்காட்டில் பிறந்ததாகச் சொல்லவில்லை ஆனால் மகப்பேற்று சடங்குகளும் பெயரீடும் திருவெண்காட்டில் நிகழ்ந்தன என்று தான் சொல்கிறார். அச்சுதகளப்பாளரும் அவருடைய மனைவியாரும் திருவெண்காட்டுக்குப்போய் முக்குளத்

* சாமிநாத தேசிகரின் வரலாறு திருவாவடுதுறை ஆதீனத்தில் 41-வது எண்ணிக்கையாக உள்ள 1951 A D-ல் வெளியிட்ட சந்தானாசாரிய புராணசங்கிரக முகவுரையில் 9-ம் பக்கம்

தில் ஸ்நானம் செய்து திருவெண்காட்டுநாதரை வழி பாடு செய்துவந்தனர் என்பது வரையில் உண்மை யென்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் அப்படி வழிபாடு செய்யும்போது கருவுற்றிருக்கக் கூடுமா வென்பதும், கருவுற்று குழந்தை பிறக்கும் வரையில் திருவெண்காட்டிலேயே இவர்கள் வாசம் செய்துகொண்டு இருந்திருக்க முடியுமா வென்பதும் ஆராய்ச்சிக்குறியது. ஏனென்றால் அச்சுதகளப்பாளர் தனது குலகுருவான அருணந்தி சிவாச்சாரியார் திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் கண்ட அருள் வாக்கை அனுசரித்து, ஆணையிட்டபடி மனைவியா ருடன் திருவெண்காட்டுக்கு இறைவனை வழிபட போயிருக்கிறார். அந்தக்காலத்தில் அவர்கள் பயபக்தி சிரத்தையுடனும் ஆசார ஒழுக்கத்துடனும் இருந் திருக்கவேண்டும். கரு உயிர்க்கக்கூடிய சுகபோகங் கள் அந்தஊரில் அந்தக்காலத்தில் அவர்கள் அனுபவித் திருக்க நியாயமில்லை. இதோடு அச்சுதகளப்பாளரோ ஓர் சிற்றரசர், அல்லது அவரை ஓர் பெரிய பூபதியாக வைத்துக்கொள்வோம், எப்படியிருந்தாலும் சுமார் ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட காலம் தன்னுடைய ராஜ்ஜியத்தையோ அல்லது குடும்பத்தையோ விட்டு விட்டுதிருவெண்காட்டிலேயே தங்கியிருக்கமுடியாது. இக்காரணங்களினால் அவர்கள் திருவெண்காட்டில் முக்குளத்தில் ஸ்நானம் செய்து சுவேதாரணிய ஈசுவரரை இருவர்களும் சிலகாலம் வழிபாடு செய்து திரும்பவும் பெண்ணாகடம் வந்தபிறகுதான் கருவுற்று குழந்தையும் பிறந்திருக்கவேண்டும். இத்துடன் மெய் கண்டார் பிறந்த ஊர் பெண்ணாகடமென்று கர்ண பரம்பயையாகப் பெண்ணாகடம் வாசிகள் சொல்லிக்

கொள்வதும் கருதத்தக்கது குழந்தை பிறந்து சௌகரியமாக இருக்கிற காலத்தில் அக்குழந்தையை பிரார்த்தனை ஸ்தலங்களுக்கு எடுத்துக்கொண்டுபோய் காப்பு இடுகிறது முதலிய மகப்பேற்று சடங்குகளும், பெயரீடும் செய்கிறது உலக வழக்கம். அதனால் மாதவச் சிவஞான முனிகள் சொல்வது பொருந்தும். சந்தானசாரியார் புராணத்தில் கண்ட அம்சம் பொருத்தமாக இல்லை.

மெய்கண்டாரின் வாழ்க்கை.

35. இனி மெய்கண்ட தேவர் சிறுவயதிலேயே சைவ சித்தாந்த சாஸ்திரமாகிய சிவஞானபோதம் இயற்றி ஞானியாக இருந்ததுமல்லாமல், அவர் சிறிது காலம் குடும்ப வாழ்க்கையிலிருந்து அரசு புரிந்தாரா என்பதைப்பற்றி விசாரிப்போம். அவர் அரசராக இருந்திருக்கலாம் ஏன்பதற்கு சில சான்றும் உண்டு. திருவண்ணாமலையில் இருக்கிற மற்றொரு கல்வெட்டு ஒன்றில் (No. 74 Vol. VIII South Indian Inscription) திருவெண்ணெய்நல்லூருடையார் மெய் கண்டதேவர் ஊருடைய பெருமாளானவர் மாத்தூர் கோயிலுக்கும் ஏரிக்கும் சில நிலம் தானம் கொடுத்திருப்பதாகப் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஷை கல்வெட்டில் குறிப்பிட்ட வருஷமும் 1232 A. D. ஆகிறது. இதில் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவன் என்று இருப்பதனால் பெண்ணை கடம் அச்சுதகளப்பாளராயரின் குமாரரான மெய் கண்டதேவர் திருவெண்ணெய்நல்லூரில் தன் அம்மான் காங்கயபூபதியார் வீட்டில் இருந்ததாக சரித்திரம்

இருப்பதனுலும், திருவெண்ணெய்நல்லூருக்கு வட மேற்கில் சுமார் 25 மைல் தூரத்தில் திருவண்ணுமலைக் குச் சமீபத்தில் மாத்தூர் என்கிற கிராமம் இருப்பதனு லும், திருவெண்ணெய்நல்லூரிலேயே மெய்கண்டார் மகாசமாதிநிலை அடைந்ததாக ஏற்படுவதினுலும், மேற்படி கல்வெட்டின் வருஷமும் கோப்பெருஞ் சிங்கன் காலமாக இருப்பதனுலும் ஷ்டி கல்வெட்டில் கண்ட " திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டான்" என்பவர் சிவஞானபோதம் இயற்றிய திருப்பெண்ணு கடம் அச்சுதகளப்பாளரின் திருக்குமாரரான மெய் கண்டாராக இருக்கலாம் அண்ணுமலைநகர் திரு. T. V சதாசிவ பண்டாரத்தார் அவர்களும் அந்த கல் வெட்டில் கண்ட மெய்கண்டார் இவராக இருக்கலா மென்று "மெய்கண்ட தேவர் காலமும் அவர் அமைத்த திருக்கோயிலும்" என்ற கட்டுரை யாழ்ப் பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் வெள்ளிவிழா மலரில் வெளியிட்டிருக்கிருர். தவிர மெய்கண்டவரின் முதல் மாணவர் அருணந்தி சிவாச் சாரியார் இயற்றிய "இருபா இருபஃது என்ற நூலில் "கோனே, மன்னே, மன்னவா. வெண்ணெய்க்கதிபதி, வெண்ணெய்வாழ் மன்ன, வெண்ணெய் வேந்த, மன்னன் எங்கோன் வார்புனல் பெண்ணை வெண் ணெய்க்காவலன், மெய்கண்டதேவன்" என்று பல விடங்களிலும் கூறப்படுவதனுல் மெய்கண்டதேவர் ஓர் அரசராகவே இருந்திருக்கலாம்

36 ஆனுல் சாக்கிராதீத நிலையை அடைந்த பிறகு உலக நோக்கு உடையராய் இருந்திருக்கலாமா வென்று ஓர் சந்தேகம் ஏற்படுகிறது. அப்படியும் இருக்கலாம் என்பதற்கு அத்தாட்சியாக அறுபத்தி

மூன்று நாயன்மார்களில் மூர்த்தி நாயனுர் சரிதத்தைப் பார்க்கில் அவர் "எர்நாளும் துறவை ஒழுக்கமாகக் கொண்டு ஐம்புலன்களேயும், பகைவர்களேயும் வென்று தீங்கு நேரிடாமல் இந்த உலகத்தையும் ஆண்டபோது தொண்டின் பேதம் அதாவது அடிமைத் திறத்தில் வேறுபடாத பேரரசு ஆளப்பெற்று நாதன் சேவடி நண்ணினுர்" என்று சேக்கிழார் இயற்றின பெரிய புராணத்திலிருந்து தெரிகிறது ஆதிகாலத்தில் அரசாண்ட ஜனக ரிஷியின் சரித்திரமும் இதற்குச் சான்ருக இருக்கிறது

37 மெய்கண்டாரின் மாணவர்களில் ஒருவரான மனவாசகங்கடந்தார் இயற்றிய உண்மைவிளக்கத்தில் கடைசி வெண்பாவிலிருந்து மெய்கண்டார் விவாகமாகாதவர் என்று யூகிக்க இடம் கொடுக்கிறது

ஷை வெண்பா

மன் அதிகை வாழும் மனவா சகம்கடந்தான்
*மின்னனேயார் வாழ்விலுரு மெய்கண்டான் — பன்னுமறை
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் செய்தான் உற்று

38 மேலே கண்ட வரலாற்றினுல் திருஞான சம்பந்த நாயனுர் குழந்தைப்பருவத்திலேயே தோத்திரமாக தேவாரம் அருளியதுபோல் மெய்கண்டதேவர் குழந்தைப் பருவத்திலேயே தத்துவ ஞானியாக இருந்து சாத்திரமாக சிவஞான போதம் அருளிய

* திருவாவடுதுரை ஆதினம் — வெளியீடு 87 உண்மைவிளக்கம் பக்கம் 28 "மின்னனேயார்" என்றும் ஆனுல் தருமபுரம் ஆதீனம் வெளியீடு 408-ல் பக்கம் Lviii (58) ல் "மின்னனேய" என்றும் இருக்கிறது.

துடன் பிற்பட்ட காலத்தில் அரசும் புரிந்திருக்கலாம் மெய்கண்டார் மடம் என்று தமிழ் நாடு பூராவிலும் காஞ்சீபுரம், திருவண்ணாமலை, இராமகிரி, எலவானாசூர் திருவக்கரை, வில்லியனூர், மதுரை திருப்பத்தூர், திருநெல்வேலி, பிர்மதேசம், அம்பாசமுத்திரம் முதலிய பல ஊர்களில் இருந்திருப்பதாக பல கல்வெட்டி லிருந்து மெய்கண்டார் கண்ட சைவசித்தாந்த சமயம் தமிழ்நாடு பூராவும் பரவியிருக்கிறதென்று தெரிகிற தனுல் சைவசித்தாந்த சமயக் கொள்கையில் மிகவும் ஆர்வமுள்ள ஒருவர் தமிழ்நாட்டுக்கு தலைமை வகித் திருந்தால் தான் அது எங்கும் பரவியிருக்கக்கூடுமான தால் மெய்கண்டதேவர் அரசராக இருந்திருக்கலாம்

மெய்கண்டாரின் மாணவர்கள்.

39. மெய்கண்டாரின் மாணவர்கள் நாற்பத்தி ஒன்பதின்மர் (49) என்பர். அவர்களில் அருணந்தி சிவாசாரியார், மனவாசகங்கடந்தார், சிற்றம்பல நாடி கள், கண்ணுடைய வள்ளலார் என்கிற நால்வர்களின் பெயர்தான் தெரிகிறது.

அருணந்தி சிவாசாரியார் என்பவர் ஆதிசைவர். மெய்கண்டார் குடும்பத்திற்கு பரம்பரை குலகுரு வம்சத்தினர். மேலே கண்டபடி அச்சுதகளப்பாள ருக்கு பிள்ளையில்லாக் குறையை, தேவாரத்தில் கயறு சாற்றி இறைவன் அருளால் திருஞானசம்பந்தரின் திரு வெண்காட்டுப் பதிகம் கிடைத்து அதில் கண்டபடி நடக்கச்செய்து, நீக்கினவர் ஆகமங்கள் அனைத்தையும் கற்றுணர்ந்தவரானதால் சகலாகம பண்டிதர் என்று பெயர் பெற்றவர். தமிழிலும் நல்ல பாண்டித்தியம்

உள்ளவர். மெய்கண்டாருக்கு பிரதம சீடரானவர். பரமேஸ்வரனே நெற்றிக்கண்ணையும் நீலகண்டத்தை யும் மறைத்துக்கொண்டு தனக்கு குருவாக வந்தவர் என்று மெய்கண்டாரைத் தோத்திரம் செய்தவர். மெய் கண்டாரின் ஆணையின்படி சிவஞானபோதத்திற்கு உரையாகவும், வழிநூலாகவும், "சிவத்துக்கு மேலான தெய்வமில்லை, சித்தியாருக்கு மேலான சாத்திரமில்லை" என்று பெருமை பொருந்திய சிவஞான சித்தியார் என்கிற நூலையும், இருபா இருபது என்கிற மற்றொரு நூலையும் இயற்றியவர்.

மனவாசகங்கடந்தார் :— திருவதிகையில் பிறந் தவர். அங்கே வீரட்டேஸ்வரரை வழிபட்டு பிறகு பண்ருட்டியில் "சோமநாதஸ்வாமி" என்னும் லிங் கத்தை பிரதிஷ்டை செய்து, அந்த சந்நிதியில் தான் இயற்றிய "உண்மை விளக்கம்" என்கிற நூலை அறங் கேற்றுபடி செய்தவர்.

சிற்றம்பலநாடிகள் :— இந்தப் பெயர் உள்ளவர் கள் பலர். அவர்களில் மெய்கண்டாரின் மாணவர் யாவர் என்பது தெரியவில்லை "துகளறு போதம்" என்கிற நூலை இயற்றிய சிற்றம்பலநாடிகள் மெய்கண் டாரின் மாணவர் என்று *ஒரு சிலர் அபிப்பிராயப்படு கிறார்கள். ஆனால் மற்றும் †சிலர் "துகளறு போதம்",

---

* பக்கம் 15—மெய்கண்டார் வரலாற்றாராய்ச்சி—சிவஞானபோத மூலமும் சிற்றுரையும்.

— ஔவை, துரைசாமிப்பிள்ளை

† 1 திருவாவடுதுறை ஆதீனம் வெளியீட்டு நூல் எண் 58—"துகளறு போதம்" (*Continued.*

இயற்றியவர், அருணமச்சிவாயரின் சீடர்களான சித்தர் சிவப்பிரகாசர், காழிக்கங்கை மெய்கண்டார் என்பவர்களில் காழிக்கங்கை மெய்கண்டார் என்கிற சீர்காழி சிற்றம்பல நாடிகள் என்பர். மெய்கண்டாரின் மாணவரான சிற்றம்பல நாடிகள் யாவர் என்பது ஆராய்ச்சிக் குறியது.

கண்ணுடைய வள்ளலார் :—இவரைப்பற்றியும் சரியான விவரம் தெரியவில்லை 'ஒழுவிலொடுக்கம்" என்கிற நூல் கண்ணுடைய வள்ளலார் என்ற ஒருவரால் இயற்றப்பட்டிருக்கிறது இதை இயற்றியவர் தான் மெய்கண்டாரின் மாணவர் என்று குறிப்பிடவில்லை தன்னுடைய நூலுக்கு முதல்நூல் 'சிவஞான போதம்" என்றும் சொல்லவில்லை. "ஒழுவிலொடுக்கம்" "வேதாந்தம் சித்தாந்தம் இரண்டையும் தம்முன் முறணுதவாறு அவ்விரண்டின் பொருள் பெருப்பான்மையான் ஒருமைப்படுத்துரைப்பது" என்று அறிஞர்களின் அபிப்பிராயம். இதை இயற்றியவர் சீர்காழி ஞானசம்பந்தப்பெருமானை குருவாகக் கொண்டவர் என்றும் சொல்லப்படுகிறது இவர் பிற்காலத்தவராக இருக்கவேண்டுமென்று தமிழ் ஆராய்ச்சித் துறையில் அமர்ந்திருந்த திருவாளர் அனவரத விநயகம் பிள்ளை அபிப்பிராயப்படுகிறுர்கள்.

Last page continuation :—

2 ஷை ஆதீன வெளியீட்டு எண் 86 'சிற்றம்பலநாடிகள் கலித்துறை முதலியன" முகவுரை பக்கம் 2, சிற்றம்பலநாடிகள் வரலாறு பக்கம் 6

3. 1958—குமரகுருபரன் பத்திரிகை— கமல ஞானப்பிரகாசர்" பக்கம் 79.

மெய்கண்டார் கண்ட சுத்தாத்வைத சைவ சித்தாந்த சமயம்

40. சமயத்தில் சைவ சமயம் மேலானது. அது கடவுள். உயிர். உலகம் என்ற மூன்றையும் பற்றி விரிவாக எடுத்துக் காட்டுவது சைவ சமயம் பழமை யானது. தெற்கே கன்னியாகுமரிக்கு தெற்கிலிருக்கிற ஈழநாடு உள்படவும் கடலில் கொள்ளை கொண்டு போகப்பட்டதாகச் சொல்லும் லெமூரியா நாடு உள்படவும் எங்கும் பரவியிருந்தது சைவ சமயம் மிகவும் பழமை நூலாம் 10-ம் திருமுறையான திரு மந்திரத்தில் வருஷத்திற்கு ஒரு பாடலாக 3000 வரு ஷம் இருந்து 3000 பாடல்கள் பாடின திருமூலநாயனு ராலும். மேலே சொன்ன கடவுள், உயிர், உலகம் என்கிற (பதி. பசு. பாசம்) முப்பொருள்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர பண்டைய நூல்களாகிய தொல்காப்பியம். அகநானூறு. புற நானூறு முதலிய நூல்களும் சைவ சமயம் பரவியிருந் ததற்குச் சான்ருகும். பார்வதி அவதாரம் பண்ணின இடமான இமயமலைக்கு தென்சாரலில் உள்ள காஷ் மீரம் என்னும் நாட்டில் இந்த முப்பொருள்களைப் பற்றிய சைவ சமயம் வெகுகாலங்களுக்கு முன்னு லிருந்து அனுஷ்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படு கிறது

41 ஆனுலும் கடவுள், உயிர் உலகம் என்கிற பதி. பசு பாசத்தின் உண்மையை பலவிதமாக சித்தாந் தம் (முடிவு) செய்திருக்கிருர்கள். சித்தாந்தம் என்பது பொதுவாக **துவைதம்**, **அத்துவைதம்** என இரண்

டாகவும், அதில் அத்துவைதம் என்பது சிறப்பாக கேவல அத்வைதம். விசிட்டாத்தைவதம், சுத்த அத்வைதம் என்றும் உலகில் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. கேவல அத்வைதத்திற்கு சங்கர சித்தாந்தம் என்றும், விசிட்ட அத்வைதத்திற்கு இராமானுஜ சித்தாந்தம் என்றும், சுத்த அத்வைதத்திற்கு மெய்கண்டார் சித்தாந்தம் என்றும், துவைதத்திற்கு மாதவ சித்தாந்தம் என்றும் கூறப்படுகிறது

ஆனால் ஸ்ரீ மெய்கண்டார் கண்ட சுத்த அத்வைதத்தை மெய்கண்டான் சித்தாந்தம், சைவசித்தாந்தம், முதற் சைவநெறி, ஆகம சித்தாந்தம், புனித அத்வைதம் சுத்த அத்வைதம் என்று பல பேர்களால் சொல்லப்படுகிறது.

திருவெண்ணெய்நெல்லூரில் ஸ்ரீ மெய்கண்டதேவர் ஸ்ரீபரஞ்சோதி முனிவரால் உபதேசிக்கப்பெற்ற பிறகு தன் குருவினிடம் தான் உபதேசம் பெற்ற விஷயங்களை அங்கே எழுந்தருளியிருக்கிற பொல்லாப் பிள்ளையாருடன் கலந்து. கேட்டு, சிந்தித்து தெளிந்து நிட்டை கூடி அனுபவித்ததில் தான் கண்ட முடிந்த முடிபை மெய்கண்டார் தான் அருளிய சிவஞான போதம் என்கிற நூலில் அருளியிருக்கிறார். அவர் கண்ட முடிந்த முடிபை மெய்கண்டார் கண்ட சுத்தாத்வைதம் என்று சொல்லப்படுகிறது.

42 சுத்தாத்வைத சமயத்தின் கொள்கை:—பதி, பசு, பாசம் என்று முப்பொருள் உண்டு. பதி என்பது கடவுள். அவன் ஒருவனே. பசு என்பது உயிர் (ஆன்மா). ஆன்மாக்கள் எண்ணில்லாதது. பாசம்

என்பது மலம். மலம் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும் பதி, பசு, பாசம் இவைகளின் உண்மைகளையும் இலக்கணங்களையும் சிவஞான போதம் முதல் 6 சூத்திரங்களில் சொல்லப்படுகிறது.

பசுவானது பாசத்தை விட்டு முற்றிலும் நீங்கி சிவத்தினோடு இரண்டறக்கலந்து நிற்றல் பசு முத்திப் பேறு அடைதல் எனப்படும். முத்திப்பேறு அடைவதற்கான சாதனங்கள் 7, 8, 9, சூத்திரங்களில் கூறப் படுகிறது. அச்சாதனங்களாவது குரு அருளும், ஐந் தெழுத்துமாகும்.

குரு அருள் தவத்தினால் கிடைக்கும். தவம் என்பது சரியை கிரியை யோகம். தவத்தினால் பதியே-குருவாக வந்து ஞானத்தை உணர்த்தி, பதியை அறியும்படி அருளுவார். அப்போது ஆன்மா, கடவுளை இதயத்தில் வைத்து திரு *ஐந்தெழுத்தால் பூசித்து. ஐந்தெழுத்தாலேயே நாபித்தானத்தில், மூலாதாரத்தில் இருக்கிற ஞான அனலை எழுப்பி, ஓமம் செய்து அதில் தன்னுடைய கன்ம பலன்களெல்லாம் நாசமாகும்படி ஐந்தெழுத்தாலே ஆகுதி செய்து தகித்து, பிறகு புருவ மத்தியான விந்துதானத்தில் திரு ஐந்தெழுத்தாலேயே தியானம் செய்து ஆன்மாவானது ஆண்டவனது அடிமையாக ஆகவேண்டும்.

இப்படி ஆன்மா ஆண்டவனது அடிமையாகி தன் செயல் அற்று எல்லாம் ஈசன் செயல் என்று

---

* ஐந்தெழுத்து என்பது "நமசிவாய, சிவாயநம, சிவயசிவ சிவ, சி" என்று பல நூல்களால் சொல்லப் படுகிறது.

நிற்கும் நிலைமை (ஏகமாகி இறை பணி நிற்பது) சுத்தாத்வைத நிலைமை. அந்நிலைமையில் ஆண்டவனிடம் ஆன்மாவுக்கு "அயரா அன்பு" உண்டாகிறது அப்படி அன்புடன் நிற்றல் சிவப்பேறு என்பர் இவ்விஷயங்களை 10. 11 சூத்திரங்களில் சொல்லப்படுகிறது.

இவ்வாறு செய்து சிவப்பேறு பெற்றவர்களுக்கும் உடம்பில் உயிர் நிற்கும் வரையில் பிராரர்த்த வினையின் பயனாக பெருங்காயம் இருந்த பாண்டம் போல் மலவாசனைத் தாக்குமாதலால் அவ்வாறு தாக்காமல் இருக்கும்பொருட்டு அவர்களும் அடியார்களுடன் கூட்டுறவு வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும் அடியார்களின் வேடத்தையும் ஆலயத்தையும் கண்டவுடன் கடவுள் என்றே கருதி வணங்கி தாம் பெற்ற சிவப்பேற்றின் நிலையிலிருந்து வழுவாமல் இருக்க வேண்டிய சாதனத்தை 12-ம் சூத்திரத்தில் கூறுகிறார்

ஆனாலும் 8 முதல் 11 சூத்திரங்களில் கண்டபடி தவம் செய்தலும், திருவைந்தெழுத்தால் கடவுளை இருதயத்திலும் நாபியிலும், புருவ மத்தியிலும் வைத்து முறையே அர்ச்சனை, ஓமம் தியானம் முதலியவைகள் செய்தலும், ஏகமாய் இறை பணியில் நிற்றலும் கடுமையான சாதனங்களானதாலும், அவைகள் ஞானிகளுக்கும் அறிவாளிகளுக்கும் மாத்திரம் கூடுமானதாலும் அவைகளைச் செய்ய முடியாமல் "மண்ணிடையில் இருக்கும் மாக்களும் மலம் அகற்ற" சுலபமான வழியாக அடியார்களைக் கண்டவுடன், அவர்கள் உண்மை அடியார்களாவென்று விசாரிக்காமல், அவர்களின் வேஷத்தையே கடவுள் என்றும்,

அதுபோலவே ஆங்காங்கு காணப்படும் கோயில்களை யும் கடவுள் என்றும் நினைத்து வணங்கிஞலே சிவப் பேறு அடைய சுலபமான வழி என்று 12-ம் சூத்திரத் தில் கூறுகிறதாகக் கருதப்படலாம்.

43. மேலே கண்ட விஷயங்களை சிவஞான போதம் என்கிற நூலில் 12 சூத்திரங்களாகவும் அவை களுக்கு *வார்த்திக பொழிப்புரைகளாகவும் அருளப் பட்டிருக்கிறது.

அதாவது சூத்திரங்களும் ஷெ சூத்திரங்களில் சொல்லும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் கருத்துரை யும், ஒவ்வொரு சூத்திரத்தின் விஷயங்களை அவை களுக்குத் தக்கவாறு பல கூறுபாடு செய்து அதிகரண மாகப் (சூரணிகை) பிரித்து (after framing issues) ஒவ்வொரு கூறுபாட்டிற்கும் தன்ஞல் சொல்லப்படும் விஷயத்தை "மேற்கோள்" (propositton) சொல்லி அதற்கு "ஏது" (by giving re sons) ஆக அதன் கண் சொல்லப்படும் "ஐயப்பாட்டை"யும் (doubts) அதாவது காணத்தக்கதொரு பொருளை இரண்டுபடக் கருதலும், அதற்குப் புறச்சமயிகள் ஆசங்கித்துக்

---

* பொழிப்புரை என்பது பிண்டப் பொழிப்பு, வார்த்திகப் பொழிப்பு என்று இருவகை.

பிண்டப் பொழிப்பாவது:— சூத்திரத்தின் பொருளை பிண்டமாகக்கொண்டு உரைத்தல்.

வார்த்திகப் பொழிப்பாவது :— சூத்திரத்தை பல கூறுகளாகப் பிரித்து அதன் பல கூறுகளை ஏது, எடுத் துக்காட்டல் என்பவையுடன் கூட்டி அவை ஒன்றோ டொன்று மாறுபடாமையைக் காட்டல்.

கூறும் ஆக்ஷேபனைகளையும் (views and objections advanced by the opponents and which are to bo refuted) சொல்லி, அந்த ஆக்ஷேபணைகளில் உள்ள குற்றங்களை எடுத்துக்காட்டி அவைகளை மறுத்துத் தான் "ஏது"வினால் (by giving reasons) சாதித்து சித்தாந்தப்படுத்திய (அதாவது தான் முடிந்த முடிபாகக்கண்ட முடிவை) துணிபை (conclusion) யும் சொல்லி அதன் பின்னர் அப்படிச் சித்தாந்தப் படுத்திக் காட்டிய துணிபுகளை "இயைபு" (சம்பந்தம்) (sequence) காண்டல் என்கிற பிரத்தியக்ஷ பிரமாணத்தாலும் கருதல் என்கிற அனுமானப் பிரமாணத்தாலும், உரை, ஆகமம் என்கிற சாத்திரப் பிரமாணங்களாலும் (knowing through senses, inference, and scriptures), உதாரணங்களாலும் (Examples) மெய்கண்டார் எண்பித்திருக்கிறார். இப்படிக்கு 12 சூத்திரங்களிலும் கண்ட விஷயங்களை 39 கூறுபாடுகளாக (அதிகரணமாக)ப் பிரித்து தான் கண்ட முடிபுகளை (conclusions) வலியுறுத்தி நிலைநாட்டியிருக்கிறார்.

44. மெய்கண்டார் ஷை சூத்திரங்களில் கண்ட விஷயங்களை வார்த்திக பொழிப்பில் விளக்கியிருந்தாலும் அவைகள் மிகவும் கடினமான விஷயங்களானதாலும் அவைகளை மிகவும் சுருக்கமாய்ச் சொல்லப் பட்டிருப்பதனாலும் ஷை சிவஞானபோதத்திற்கு விரிவுரையாக இருக்கும்படி:—

(1) அவருடைய முதல் மாணவரான சகலாகம பண்டிதர் என்கிற அருணந்திசிவாச்சாரியார் "சிவஞானபோத"த்திற்கு வழி நூலாக அதில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை மிகவும்

விரித்து "சிவஞான சித்தியார்" என்னும் நூலை செய்யுள் நடையில் அருளியிருக்கிறார். "சிவஞான சித்தியார்" பரபக்கம் சுபக்கம் என்று இருபகுதியாக பிரிக்கப்பட்டிருக்கிறது. பரபக்கம் என்பது புறச் சமயக் கொள்கைகளை எடுத்துக்கூறி அவற்றின் பொருந்தாமையை விளக்கிக் காட்டுவது. சுபக்கம் என்பது சித்தாந்த சைவ உண்மைகளை நன்றாக வலியுறுத்தி நிலைநாட்டுவது. அப்படி அருணந்தி சிவாசாரியார் எழுதியிருக்கிறார் என்பது "எம் குருநாதன் கொண்டு தீதகல எமக்களித்த ஞான நூலை தேர்ந் துரைப்பன் சிவஞான சித்தி" என்றும், "மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு சைவத்திறத்தினை தெரிக்கலுற்றாம்" என்றும் கூறியிருப்பதிலிருந்து தெரிகிறது. இவரே தான் இயற்றிய மற்றொரு நூலாகிய "இருபா இருபஃதில்" பாச இலக்கணத்தைப் பகுத்து வினாவும் விடையுமாக பாசநீக்கமே பதியை அடையும் வழி என்றும், அதுவே முத்திப்பேறு என்றும் விளக்கியிருக்கிறார்.

(2) மெய்கண்டாரின் மாணவர்களில் மற்றொருவரான திருவதிகை மனவாசங்கடந்தார் என்பவர் சித்தாந்த சாத்திரம் 14-ல் ஆறாவதான **உண்மை விளக்கம்** என்கிற நூலை இயற்றியிருக்கிறார். இந்த நூலின்கண்தான் தன் ஆசிரியரான மெய்கண்டாரிடம் குரு சீட முறையில் தனக்குள்ள சந்தேகங்களான 'தத்துவங்கள் யாது? ஆணவ மலமாவது யாது? வினையாவது யாது? ஆன்ம சொரூபமாவது யாது? கடவுள் சொரூபம் யாது? ஸ்ரீ பஞ்சாக்கரத்தின் உண்மை யாது? என்ற வினாக்களைக் கேட்டு அவை

களுக்கு தமது குருவே விடை சொல்வதுபோல் அவைகளின் உண்மைகளை விரித்து விளக்கியிருக்கிறார்.

(3) அருணந்தி சிவாசாரியாரின் மாணவரின் மாணவரான உமாபதி சிவாசாரியார்தான் சிவஞான போத நூலுக்கு சார்பு நூலாக இயற்றிய "சிவப்பிரகாசம்" என்னும் நூலின் பாயிரத்தில் "நூலின் வழியும் பெயரும்" என்ற பகுதியில் "மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தை" அருளிச் செய்தார் என்றும் அவருடைய சீடரான அருணந்தி சிவாசாரியார் "சிவஞான சித்தியாரை" 'விரித்துக் கூறினர்'' என்றும் இந்த இரண்டு நூல்களையும் ஆராய்ந்து பார்த்து சிவாகமங்களில் சொல்லியிருக்கும் பொருளையும் தனக்குள்ள அனுபவத்தால் தனக்கு திருவருளால் உதித்த தோற்றத்தையும் கலந்து சிவப்பிரகாசம் என்னும் நூலை இயற்றினதாக பாயிரம் 11-வது செய்யுளில் கூறுகிறார். இதோடு இதற்கு அனுசரணையாக அவர் இன்னும் 7 சித்தாந்த சாத்திர நூல்களையும் அருளியிருக்கிறார்.

(4) இவருக்குப் பிற்பட்டு வந்த திரு. பாண்டிப்பெருமாள் என்பவர் ஒரு விருத்தி உரை செய்திருக்கிறார்.

(5) திருவாவடுதுறை ஆதீனத்தில் சென்ற 1956 A. D. ஆண்டில் வெளியிட்ட சிவஞான போதம் பாண்டிப்பெருமாள் விருத்தி என்கிற நூலுடன் சிவஞான போதம் தெளிபொருள் விளக்கம் என்கிற மற்றொரு நூலும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த "தெளிபொருள் விளக்கம்" இயற்றிய ஆசிரியர் பெயரை அதில் சொல்லப்படவில்லை.

அதையே பின்னிட்டு ஸ்ரீ கிருபானந்தவாரிகள் 1957-ல் சிவஞானபோதம் உரை என்று வெளியிட்டிருக்கிறார். அதிலும் அதன் ஆசிரியர் பெயர் சொல்லப்படவில்லை.

(6) அவருக்குப்பின் இப்பால் சுமார் 180 வருஷங்களுக்குமுன் இருந்த ஸ்ரீ மாதவ சிவஞான ஸ்வாமிகள் சிவஞானமா பாடியம் என்ற பேருரையும் மற்றொரு சிற்றுரையும் எழுதியிருக்கிறார்.

(7) இவைகள் தவிர திருவாவடுதுறை ஆதீனத்தில் வெளியிட்ட பழைய உரை ஒன்று இருக்கிறது.

(8) ஷை பழைய உரையில் மற்றொரு உரையும் கலந்திருக்கிறது.

(9) அவர்களால் இதுவரையில் வெளியிடப்படாத சிந்தனை உரை என்று ஒன்று இருக்கிறதாம்.

(10) சிவாக்கிர யோகிகள் என்ற ஒருவர் சிவஞானபோதத்திற்கு வடமொழியிலேயே ஓர் பேருரையும் மற்றும் ஓர் சிற்றுரையும் எழுதியிருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது.

(11) சமீப காலத்தில் இருந்த திரு. J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்கள் சிவஞானபோதத்தை ஆங்கிலத்திலேயே வெளியிட்டிருக்கிறார்.

(12) பிறகு (Dr. Bennet) டாக்டர் பென்னட் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

(13) Dr. †ஷாமரஸ் (Dr Schomerus) என்ற ஜெர்மானியார் சுமார் 60வருஷங்களுக்குமுன் ஜெர்மானி பாஷையிலும் வெளியிட்டிருக்கிறார்.

(14) பிற்பட்ட காலங்களில் மற்றும் பலர்களால் பல உரைகள் எழுதப்பட்டிருக்கிறது.

45. மேலே கண்டவர்களில் ஸ்ரீ மாதவசிவஞான ஸ்வாமிகள் சிவஞானபோதம் எதற்காக எழுந்தது என்பதை பாயிரத்தின் உரையில் கண்டிருக்கிற விவரம் :—

"இஃதென் சொல்லியவாறோவெனின் :—

இவ்விருவகை யியல்பும் (பொது இயல்பு, சிறப்பியல்பு) வேறு வேறு கூறும் ஆகமங்களின் பொருளொருமை உணரமாட்டாது ஒரோவொன்றே பற்றி ஐக்கவாத முதற் பல திரத்தால் வேறுபட்டுத் தம்முண் மாறுகொண்டு மயங்குவார்க்கு அங்ஙனம் மயங்காது அவற்றின் பொருளொருமை யுணர்தற்கு எழுந்தது இந்நூல்."

சமீப காலத்தின் சித்தாந்த பேராசிரியர்களில் ஒருவரான *பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் என்பவர்

---

† இவர் மெய்கண்டார் பிறந்த தலமான பெண்ணைகடத்திற்கு வந்து அங்கே மெய்கண்டாரின் ஞாபகச்சின்னம் ஏற்படுத்தப்படாமலும் அவரைக் கொண்டாடாமலும் இருப்பதைப்பற்றி பெண்ணைகடத்து மக்களை கண்டித்து வருத்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

---

* தர்மபுர ஆதீனத்தில் சென்ற 1941-ம் ஆண்டில் நடந்த மெய்கண்டான் சித்தாந்த மகாநாட்டுத் திருநாளில் சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

"மெய்கண்டதேவர் ஒவ்வொரு சூத்திரத்தின் கண்ணும் கடா (வினு) விடைகளால் விவாதித்து நிச்சயிக்கவேண்டிய பொருள்கள் இன்னின்னவை களையாம் என வரையறுத்து விடையிறுத்து இவ்வதி கரணங்களை வகுத்துரையாது விட்டிருப்பராயின் இப் பொழுது சிவஞானபோதத்தால் நாம் அறிந்து அனுப விக்கும் பொருள்கள் ஒருவராலும் அறியற்பாலன வல்ல" என்று சொல்கிருர்.

சமீப காலத்தின் மற்ருெருவரான அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் தலைவராகயிருந்த திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை M A., M L., அவர் கள் அடியிற்கண்டபடி சொல்கிருர்.

"In the beginning of the 13th century, the great philosophical movement was inaugurated by saint Meikandar who is the eminent auother of Sivagnana Botham, the central work of the system. This work, though very brief, contains in a nut-shell a systematic expression of the system for the first time and as such, it may be said to commence the Siddhanta movement for modern times."

46. மெய்கண்டார் கண்ட சைவ சமயத்திற்கும், அருணந்தி சிவாசாரியாரின் சைவ சமயக் கொள்கைக் கும் ஏதாவது பேதம் உண்டா என்பதைப்பற்றி சாத்திர நிபுணர்கள் கண்டறிய வேண்டும். பேதம் இல்லாவிடில் முன்னுடி வந்த திருவாவடுதுரை ஆதீ

னத்தார் தங்களுடைய *குரு தோத்திரத்தில் சிவஞான போத நெறியையும், பின்னுடி வந்த தர்மபுரத்து ஆதீனத்தார் தங்களுடைய குரு தோத்திரத்தில் சிவஞான சித்தி நெறியையும் கொண்டதாக இருக்கக் காரணம் என்ன ? இதோடு மெய்கண்டார் கண்ட சிவஞான போத நெறியை சில அத்துவைத வேதாந்தக் கொள்கைக்காரர்களும் ஒப்புக்கொள்கிறதாகத் தெரிகிறது. அப்படியானுல் அதற்குக் காரணம் என்ன ? இவைகளைப்பற்றியும் இதைப்போன்ற நுணுக்கமான தத்துவங்களையும் யாவரும் தெரிந்துகொள்வதற்காக நுட்ப அறிவுள்ளவர்கள் தெளிவு படுத்தவேண்டும்.

47 மெய்கண்டார் பிறந்த இடமாகிய பெண்ணுகடம் கிராமத்தில் களப்பாளமேடு என்ற நிலத்தில் சுமார் 1 ஏகர் 15 செண்டு நிலத்தை மெய்கண்டாருக்காகக் கிரயம் பெற்று அதில் மெய்கண்டார் நிலையம் என்று ஓர் ஆலயமும் கட்டி மெய்கண்டார் மூர்த்தியைச் சென்ற நந்தன-ஞு சித்திரை-மீ 19உ (1—5—1952) பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் செய்யப்பட்டிருக்கிறது அவ்விடத்தில் சைவ சித்தாந்த சாத்திரங்களை உபன்னியாச முறையில் விளக்கப்பட்டு வருகிறது. ஆனுலும் அதில் மற்ற மக்களுடன் தமிழ்ப் புலவர்களையும் சிவனடியார்களையும் மாணவர்களாக சேர்த்து அவர்களுக்கு உணவு உறைவிடம் கொடுத்து குரு பீடமுறையில் சாத்திரங்களை போதித்து சாத்திர வல்லவர்களாக்கி அவர்களைக் கொண்டு மற்றவர்களுக்கும் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகயிருக்கிறது.

---

* ஷை தோத்திரங்கள் இந்த நூலில் 15-ம் பக்கத்தில் காணப்படுகிறது.

மெய்கண்டார் வரலாறு

2-வது அநுபந்தம்

மெய்கண்டார் மூன்னோர்களுக்குக் கொடுத்த செப்பு பட்டயத்தின் நகல்.

ஸ்ரீ சாலிவாகன். சகாப்தம் பதின்மூன்றும் வருஷம் செல்லாநின்ற செய வருஷம் சஷரம் வையாசி மாசம் 23 சுக்கிரவாரம் தினத்தில் காளிகாதேவி அருளும் வரப்பிரசாதபெற்ற செஞ்சி ராவுத்தநல்லுடையார் அங்கதிரையர் குமார அங்கா சிங்கா சென்னு வெண்ணுன் வன்னியற் மூன்றுபேருக்கு எழுதப்படா நின்ற செப்ப பத்திரம் பூவனூரு கிரைனூரு பின்னேரி புத்தேறி துளார் சோழகபுரம் ஆக கிராமம் 6 மாபத்து பூவனூரு அங்கதிரைய படையாச்சி, கிரனூரு சிங்கதிரைய படையாச்சி பின்னேரி கைலாச படையாச்சி, புத்தேரி பல்லதிரைய படையாச்சி, துளார் சென்னு வெண்ணுன், சவுந்தரிசோழபுரம் கனகசபை படையாச்சி இந்த பிரகாரத்துக்கு எல்லை கட்டி அய்யனு குளம் பெரிய ஏரிக்கும் எழுதப்படாநின்ற சாக்ஷி குழூரு வன்னியற் அய்யம்பெருமாள் படையாச்சி பூமி பாலகன் ஆகிய அச்சித குழுமுடை பிள்ளை சோழக நல்லூர் பொன்பரப்பி வன்னியர் காளிகாங்கயன் முன்னடி வீரன் ஆவத்தி கொங்கதிரையன் விஞ்ஞதிரையன் குருச்சிகுளம் காசாருடையார் கலிங்கதிரையன் ஸ்ரீறிமட்டத்துடையான் வன்னியர் ஆதிவிராக அழகப்ப படையாச்சி, கத்தனங்குடி வெய்யினக்காரன் ரங்தோணி படையாச்சி, எருகத்தபிலியூர் பிலியை

பிரியன், ராசசேந்திரபிரியன் முகுந்திரியன் வன்னியர் பள்ளிகொண்டான்பட்டணம் வன்னியர் கடந்தையார் பூமிபாலகன் அஷ்த அதக்கனு'டையான் பொண்ணு முடையான் கண்டாச்சி மலையிட்டான், தீவுளூர் ஆழ் வான் அகஸ்தியபடையாச்சி, யெரையூர் திருவால கயி லாசப்படையாச்சி, அரியபுத்திர படையாச்சி, போத்திர மங்கலம் தொண்டமா படையாச்சி யிவர்களெல்லாம் அழைப்பித்து வைத்துக்கொண்டு குப்பத்துக்கு இன் றுரென்று அவரவருக்கு கிராம வீதிச்சு எழுதப்படா நின்ற செப்ப பத்திரம் எழுதுமிடத்தில் வன்னியர் அங்காசிங்கரு கிராம பயபத்து ஆகி ஸ்ரீறிமட்டம் எருகத்தபிலியூர் ராசசேந்திரபட்டணம் பள்ளிகொண் டான்பட்டணம் வேங்கை வனமாகிய வஷிஷ்டபுரம் இவை நாலையும் சேர்ந்த குப்பங்களுக்கு காவலும் மெய்க்காவல் . அதிகாரமும் கொடுத்து பதினெட்டு விருதும் கொடுத்து இந்த பிரகாரம் எழுதப்படாநின்ற செப்ப பத்திரம் பள்ளிகொண்டான் பட்டணம் முதல்கொண்டு சீமையார்க்கெல்லாம் எல்லை வீதிப்பு பண்ணிகிராமத்துக்கு அவரவர்செப்பப்பத்திரம்எழுதிக் கொடுத்தபடி இதுக்கு சாட்சி ஆகாசவாணி பூமிதேவி சூரியன் சந்திரன் சாட்சியாயிது கல்லு காவேரி உள்ள மட்டுக்கும் யிதுவே செப்பப்பத்திரமாய் குடுத்தபடி குடுக்குமிடத்தில் இதை உண்டு இல்லையென்று யாதா மொருவர் சொன்னுர்களோ அவர்கள் கெங்கைகரை யில் காராம்பசுவைக் கொண்ண தோழத்தில் போவார் மாதாபிதாகுரு துரோகத்தில் போவார். இந்தப்பிரகாரம் எழுதப்படாநின்றசெப்பப்பத்திரத்துக்கு அழகியகாதலி அம்மன் பாதம் அரிய ரெங்கநாயகர் பாதம் சாட்சியாய்

யெழுதினது இது பள்ளிகொண்டான் பட்டணம் புஷ்ப்பவனம் பெண்ணுகடம் *(லெச்சத்துக்கு பாகம் பிரிந்த) அங்கா, சிங்கா, கண்டாச்சி மாலையிட்டான் இவர்கள்மூணுபேர்க்கு கிராமம் பிரிந்தவிபரம்பூவனூரு கீரனூரு, அழகாபேரி, குசப்பள்ளம், மாளிகைகோ யிருளபட்டு, சவுந்தரிசோழகபுரம், குப்பம் ஏழுக்கும் குழி §34333 காலேவீசம் காணி, கடந்தையாருக்கு சம்பேரி, முள்ளுக்குரிச்சி, ஆதனகுரிச்சி, கண்ணங் குரிச்சி, சேந்தமங்கலம், சிலுப்பனூர் குப்பம், ஆக 6-க்கும் குழி §34333 காலேவீசம் காணி **அச்சுத அதகனுடப்பிள்ளை பெண்ணுமுடப்பிள்ளைக்கு** பள்ளி கொண்டான் பட்டணம் மீனர்கோட்டான் நந்திமங் கலம் வடகரை கிராமம் அஞ்சுக்கும் §34333 காலே வீசம் காணி இந்தப்படி பங்கு பிரிந்தது. சன்னதி ஸ்தலமும் பதினெட்டு தொழிலாளியும் இந்த மூணு பேருக்கும் பொதுவு. செஞ்சி சென்னு வண்ணுன் பள்ளிதிரியனுக்கு கிராமம் பிரிந்தது, துளார், புத்தேரி பின்னயேரி, நெம்மேலி, மருவத்தூர் கிராமம் ஐந்திற் கும் குழி §3330 செஞ்சிராவுத்தநல்லூர் இந்த சமஸ் தான காவல் மெய்காவல் பாளையகாரர் அரிய எழுத படாநின்ற செப்பப்பத்திரம் ஸ்ரீராமசெயம்.

ஷை செப்புப்பட்டயத்தின் பின்பக்கத்தில் 'தூக்கி சாமிண்டியம்மா துணை' என்றும், சில மூர்த்திகளின் உருவங்களும், இன்னும் சில படமும் வரைந்திருக் கிறது.

* அசலில் புரியவில்லை. § தமிழ் லெக்கம்,

3-வது அனுபந்தம்

திருச்செங்காட்டாங்குடி
கார்காத்தார் மடத்து தரும பட்டயம்

ஸ்ரீசுவஸ்தஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன் அரிய விராயவி பாடன், பாஷைக்கு தப்பவிராய கண்டன். கண்டநாடு கொண்டு கொண்டநாடு கொடாதான், முத்தமிழாகரகண்டான், சோழமண்டலத்து துரோணுசாரியன், பாண்டிமண்டலத்து பரவனுசாரியன், தொண்டை மண்டலத்து பிரதிஷ்டாசாரியன், மனுநீதி சங்கல்பித்து பிருதிவி ராஜ்யம் பண்ணி அருளாநின்ற சாலிவாகன சகாப்தம் 1225 கலியாப்தம் 4444 இத்தினம் மேல் சென்று நின்ற விக்கிரம வருஷம் தைமீ 15-ம்தேதி சோமவாரம் பூச நட்சத்திரம் பஞ்சமி திதியும் கூடிய சுபதினத்தில் 56 தேசத்துக்குத் திலகமான சோழ மண்டலத்தில் காவிரி தீரம் சூழ்ந்த ஸ்தலத்தில் அறுபத்தாருயிரம் கோடி தீர்த்தத்திலும் விசேஷமான திருச்செங்காட்டாங்குடியில் 96 ஜாதிக்கும் மடமும் பணிவிடையும் நடத்திவருகிற முறமையிலுலே நம்முடைய மரபு கார்காத்தார் அனேவோர்களும் கூடி திருவாத்தி மகாமண்டபத்தில் பரிகலபரிச்சின்னமும் கூட்டி ஆதி சண்டேஸ்வர நாயனுர் திருவாய் மலர்ந்தருளிய மடதர்ம சாஸனப்பட்டயம்.

இத்தலத்தில் பேர்பெற்றேர் சிறுத்தொண்டநாயனுர், வெண்காட்டு நங்கை, சந்தண நங்கை, சீராளன், பூமிதேவி, துவாதசாதித்தர், காடவர்கோன்ராஜா, சமுத்திரராஜன், ஆத்தி விருக்ஷம் இவர்களுக்கு ஸ்வாமி கங்காளரூபமாய் வந்து மோக்ஷம் கொடுத்தருளினுர். இப்படி ஞான பூமியான ஸ்தலத்தில் மேல்வீதியில்

மேல் சரகில் வீதியில் வீதிக்கும் மேற்கு கொத்தன் கொல்லைக்கு கிழக்கு, ஓதுவார் மனைக்கும் தெற்கு, ஆடுரா பாக்கியம் மடத்துக்கு வடக்கு, இன்னன்கெல் லைக்குள்பட்ட மனையானது கிழக்கு மேற்கு அடி 225, தெற்கு வடக்கு 56, இந்த மனை பரமேஸ்வர நம்பியார் கையில் அய்யாத்து மின்னல் ஆறு பொன் அஞ்சுபணத் துக்கு சுத்த கிரயம் வாங்கி கல்வெட்டி நாட்டி காஞ்சீ புரத்தில் இருக்கும் செப்பேட்டுப் பிரகாரம் தாம்பிர சாதனம் எழுதிக்கொடுத்தபடியினாலே அபிஷேக கட் -டளை கணபதி தம்பிரான் அவர்களும் பரமேஸ்வரநம்பி யார் ஒதுவார், தடுத்தாட்கொண்ட பண்டாரமும் இவர்கள் அரிய மடமும் கட்டி, மடத்துக்கு சிதம்பரத் தில் அகஸ்தியமுனி கோத்திரத்தில் பழனிபண்டாரம் அவர்களை மடத்தில் வைத்து தான சாசனமாயும், புத்திர பௌத்திர பாரம்பரியமாய் அனுபவித்துக்கொள் வீர்களென்று வைத்து அவர்களுக்கு வருஷாசனம் நடக்கும் சுவாத்தியம் வருஷம் ஒன்றுக்கு எந்த இடத் தில் எந்தப் பணம் வழங்குமோ அந்தப்பணம் தலைக் கட்டு 1-க்கு பணம் 1-ம் சாப்பாடும், உத்தியோகஸ்த ருக்கு பணம் 2, குதிரை ஏறுகிறவர்களுக்கு பணம் 5, பல்லக்கு ஏறுபவர்களுக்கு பணம் 10, கல்யாணத்துக்கு மாப்பிள்ளை வீட்டுக்கு பணம் 1, பெண் வீட்டுக்கு பணம் 1. ருது சாந்தி பணம் 1, சீமந்த பணம் 1, விளக் கேத்துகிறதுக்கு பணம் 1, இந்தப்படி நன்மை தீமைக் கும் கொடுத்து நடப்போமாகவும்.

கார்காத்த வேளாளர் பெருமை

காருக்கு பிணையேற்றகலை சிறைவிடுத்த வீரியர், கோப காராளர், பாண்டிமண்டல பிரதாபர், விருத்தா

சல கிரியர், மணிமுத்தாநதி பிரதாபர், 1008 சிவஸ்தலத் திலுமுள்ள பெரியோர், மூவேந்தரை பொருதுஜெயங் கொண்ட வீரியர், மூவேந்தர் பாடல்கொண்டருளிய நாயகர், மும்முரசமுழக்கமணிவாசலுடையோர், சொல் கடவாத பூஷணர், சைவபரிபாலனர் மெய்கண்ட சிவா சாரியார், செங்கழுநீர் மாலை அழகியர், கெங்காகுல கோத்திரர், பொற்பூஷணிக்காய் பரிசு செய்யப் பெற் றோர்கள். சோழன் சேரன் பாண்டி மண்டலத்தார் கார்காத்தார் அனைவோர்களும் கூடி அன்னதானத் திற்கு விசேஷமான திருச்செங்காட்டாங்குடி மட தர்மத்தை பாரம்பரியமாய் நடத்திவைப்போமாகவும் இந்த மடத்திற்கு பழுது வந்தால் நாங்கள் கட்டி வைப்போமாகவும். இந்த தர்மத்திற்கு யாராகிலும் வாக்கு சகாயம், சரீர சகாயம், அர்த்த சகாயம் பண் ணின பேர்கள் குபேர செல்வமும் சிறுத்தொண்டர் காடவர்கோன் ராஜா பெற்ற பேறு பெறுவார்கள். இந்த மட தர்மத்திற்கு விரோதம் பண்ணின பேர்கள் கெங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத் தில் சேர்வார்களாகவும். இந்த சாசனம் எழுதின நன்மைக்கு சரவணமுத்து பண்டாரம் சொல்படிக்கு அருணசலப் பத்தன் கெட்டெழுத்து.

4-வது அநுபந்தம்
சிவஞானபோத சூத்திரங்கள்.

மங்கல வாழ்த்து.

கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

அவையடக்கம்

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமைஇகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்குஇயைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்.

முதல் சூத்திரம்:

அவன்அவள் அதுஎனும் அவைமூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி யென்மனார் புலவர்.

2-ம் சூத்திரம்.

அவையே தானே யாய் இரு வினையின்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

3-ம் சூத்திரம்.

உளது, இலது என்றலின் எனதுஉடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டி வினைஇன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா,

4-ம் சூத்திரம்.

அந்தக்கரணம் அவற்றின் ஒன்றுஅன்று, அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத்து உணராது
அமைச்சு அரசுஏய்ப்ப நின்றுஅஞ் சவத்தைத்தே.

5-ம் சூத்திரம்.

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண் மூக்கு
அளந்து அறிந்துஅறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமிஅருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

6-ம் சூத்திரம்.

உணர்உரு அசத்துஎனின் உணராது இன்மையின்
இருதிறன் அல்லது சிவசத்து ஆம்என
இரண்டு வகையின் இசைக்கும் மன்உலகே.

7-ம் சூத்திரம்.

யாவையும் சூனியம் சத்துஎதிர் ஆகலின்
சத்தே அறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டுஅலா ஆன்மா.

8-ம் சூத்திரம்.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

9-ம் சூத்திரம்.

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண் நிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

10-ம் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே.

11-ம் சூத்திரம்.

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

12-ம் சூத்திரம்.

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே.

1. மெய்கண்டார் வரலாறு ரூ 0—50

2. விருத்தாசல புராணம் ரூ 1—00

3. திட்டகுடி என்கிற
திருவதிட்டகுடி புராணம் ரூ 0—75

இவைகள் கிடைக்கும் இடங்கள்

1. **அமுதமொழி நூலகம்,**
41, கடைவீதி, விருத்தாசலம்.
2. **தங்கராஜுப் பிள்ளை,**
இரும்பு & ஷாப், பேண்ணாகடம்.
3. **புதுமைப் பிரசுரம்,**
கடைவீதி. பேண்ணாகடம்.
4. **ஜோதி பிரஸ்,**
தெற்குரத வீதி, சிதம்பரம்
5. **அமுத நிலையம்,**
13, மூர்த்திசெட்டி தெரு. கும்பகோணம்
6. **மணிவாசக மன்றம,**
வேளாளர் தெரு. அரியலூர்.
7. **சன்மார்க்க சங்கம்,**
வள்ளலார் மில்,
பூக்கார சுப்பிரமணியசுவாமி கோவில்தெரு
தஞ்சாவூர்
8. **பாரி நிலையம்,**
59, பிராட்வே, சென்னை 1
9. **ரெங்க விலாஸ்,**
புக் ஷாப், தியாகதுருகம்
10. **மௌனசாமி மடம்,**
சபாநாயகர் தெரு, சிதம்பரம்

ஸ்ரீ முருகன் அச்சகம், பெண்ணாடம்.